# சுவிஷேசக் காப்புப் பாடங்கள்

## பட்டியல்

| எண் | பாடம் |
|---|---|
| 1 | தேவனைத் தேடுதல் |
| 2 | தேவன் |
| 3 | இயேசு தேவன்தான் |
| 4 | இயேசுவின் போதனைகள் |
| 5 | தேவனுடைய வார்த்தை |
| 6 | பாவம் |
| 7 | சிலுவை |
| 8 | மனந்திரும்புதல் |
| 9 | ஞானஸ்நானம் |
| 10 | இயேசுவே ஆண்டவர் |
| 11 | சபை |
| 12 | பரிசுத்த ஆவியானவர் |
| 13 | மாபெரும் கட்டளை |

# மேம்படுத்தப்பட்ட சுவிஷேசக் காப்புப் பாடங்கள்

இவை மேம்படுத்தப்பட்ட சுவிஷேசக் காப்புப் பாடங்கள் ஆகும். இப்பாடங்களை எந்த வரிசைக்கிரமத்திலும் நீங்கள் கற்பிக்கலாம். உங்களது ஒரே குறிக்கோள், தேவனைத் தேடுபவருக்கு சத்தியத்தின் அடிப்படை அறிவைப் போதிப்பதுதான். வேதம் கற்றுக் கொள்பவருக்கு இந்தப் பாடங்களை மட்டும்தான் போதிக்க வேண்டுமென்பதில்லை. அவர் கிறிஸ்துவராவதற்கேதுவான பல்வேறு வசனங்களையும் நீங்கள் போதிக்கலாம். இந்தப் பாடங்கள் மட்டுமே நாம் கற்பிக்க வேண்டிய சகலத்தையும் உள்ளடக்கியதாக கருதக் கூடாது. எதிர்காலத்தில் நாம் இதர பாடங்களையும் சேர்ப்போம்.

தேவனைத் தேடுபவருக்கு கற்பிக்கக் கூடிய பொதுவான வரிசையில் இப்பாடங்கள் அமைந்துள்ளன.

# <u>ஞானஸ்நானத்திற்கு முந்திய அடிப்படைப் பாடங்கள்</u>

| எண் | பாடம் | நோக்கம் |
|---|---|---|
| 1 | தேவனைத் தேடுதல் | தேவனைத் தேடுதலில் தீவிரம் காட்ட ஊக்குவித்தல் |
| 2 | தேவன் ♠ | வேதத்திலுள்ள தேவனை அறிமுகம் செய்தல் |
| 3 | இயேசு தேவன்தான் ♠ | கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்துப் போதித்தல் |
| 4 | இயேசுவின் போதனைகள்♠ | கிறிஸ்துவின் சில போதனைகளையும் தம்மைக்குறித்த உபதேசங்களையும் போதித்தல் |
| 5 | வார்த்தை ♣ | கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்திற்கு அடிப்படையாக வேதவாக்கியங்களைக் கற்றலும் கேட்டலும் எவ்வளவு அவசியமானதென்று போதித்தல் |
| 6 | பாவம் ♣ | தேடுபவருடைய வாழ்க்கையில் தேவனுடைய முக்கியத்துவத்தையும் மன்னிப்பைப் பெருதலின் அவசியத்தையும் போதித்தல் |
| 7 | சிலுவை ♣ | கிருபையினாலுண்டான தேவனுடைய திட்டத்தை, சிலுவை எப்படி இரட்சிப்பாக நமக்குத் தருகிறது என போதித்தல் |
| 8 | மனந்திரும்புதல் ♣ | வேத அடிப்படையிலான மனந்திரும்புதலை கற்பித்தலும், கிருபையைப் புரிந்து கொள்ளச் செய்தலும் |
| 9 | ஞானஸ்நானம் ♣ | மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு கிறிஸ்துவராக மாறுவதைப் போதித்தல் |
| 10 | இயேசுவே ஆண்டவர் ♣♦ | கிறிஸ்துவை விசுவாசிப்பவர்க்கு ”இயேசுவைப் பின்பற்றுவதன்” பொருளை போதித்தல் |
| 11 | சபை ♣ | விசுவாசத்தை நடைமுறைப் படுத்தவும் காத்துக் கொள்ளவும் தேவன் ஏற்படுத்திய சபை பற்றிய திட்டத்தைப் போதித்தல் |

♠ கிறிஸ்துவரல்லாதவர்க்கு அவசியம் போதிக்கப்பட வேண்டிய பாடம்

♣ அனைவர்க்கும் அவசியம் போதிக்கப்பட வேண்டிய பாடம்

♦ கிறிஸ்துவ பின்னனி கொண்டவர்க்கு பாவப்பாடத்திற்கு முன் போதிக்கலாம், இதர பாடங்களை தேவைக்கேற்ப போதிக்கலாம்.
ஞானஸ்நானத்திற்குப் பிந்திய பாடங்கள் - முதிர்ச்சியடைவதற்கானவை

| எண் | பாடம் | நோக்கம் |
|---|---|---|
| 1 | பரிசுத்த ஆவியானவர் | புதிய சீஷரின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு பணிகளை போதித்தல் |
| 2 | மாபெரும் கட்டளை | கிறிஸ்துவின் ஊழியத்தின் நோக்கத்தைப் போதித்தல் |

# 1.தேவனைத் தேடுதல

உபயோகப்படுத்தப் பட்டுள்ள வசனங்கள்
1. மத்தேயு 7:7, 13:14
2. லூக்கா 13:22-30
3. மத்தேயு 6:25-33
4. எபிரெயர் 11:6
5. மத்தேயு 13:44-46
6. அப்போஸ்தலர் 8:26-39

நோக்கம்: கற்பவருக்கு தேவனுடனான உறவைத் தேட எவ்வளவு முயற்சி தேவை என்பதை உணர்த்துதல்

1. மத்தேயு 7:7, 13-14

தேடுகிற யாவரும் கண்டடைவார்கள் என்பது வேதத்தின் வாக்குறுதி. மேலும் வெகுசிலரே கண்டடைவார்கள் என்ற எச்சரிக்கையும் வேதத்தில் உள்ளது. அப்படியானால் எவ்வளவு அதிகமானவர்கள் அதைத் தேட வேண்டும்?

2. லூக்கா 13:22-30

ஆம், வெகுசிலரே இரட்சிக்கப்படுவார்கள்: ஆகவே எல்லா முயற்சியோடும் தேடுங்கள். வெறுமனே ஆகட்டும் பார்க்கலாம் என்பவர்கள், தேவனுடைய இராஜ்யத்தைப் புறக்கனித்ததற்காக பின்பு வருத்தப்படுவார்கள். நீங்கள் எப்படி எல்லா முயற்சியுடனும் தேடுவீர்கள்?

3. மத்தேயு 6: 25-33

தேவனுக்கு முதலிடம் கொடுத்துத் தேடுவதை எந்த கவலைகள் தடுக்கின்றன? தேவனுடைய இராஜ்யத்துக்கும் அவரது நீதிக்கும் முதலிடம் கொடுக்கும்படி நீங்கள் என்னென்ன மாற்றங்களை உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்த வேண்டும்.

4. எபிரெயர் 11:6

தம்மை முழுமனதோடு தேடுகிறவர்களுக்குத் தேவன் பலனளிக்கிறார்.

5. மத்தேயு 13:44-46

இங்கே தாம் கண்டடைந்த பொக்கிஷங்களை அடைவதற்காக தம்முடைய மற்றெல்லாவற்றையும் இழக்கத் துணிந்தவர்களைப் பற்றி வாசிக்கிறோம்.

6. அப்போஸ்தலர் 8: 26-39

இங்கே தேவனை முதலாவதாகக் கருதித் தேடிக் கண்டடைந்த ஒருவரைக் குறித்து வாசிக்கிறோம். எத்தியோப்பியாவின் அமைச்சரான இவரோ மிகவும் வேலைப்பளு நிறைந்தவர். தேவனைக் கண்டறிய மற்றொரு மனிதரின் உதவியை நாடினார். அந்த மனிதர் வேதாகமத்தைக் கொண்டு தேவனைக் கண்டறிய உதவினார்.

மற்ற உபயோகமுள்ள வசனங்கள்:

- அப்போஸ்தலர் 17:10-11
- எரேமியா 29:10-13
- உபாகமம் 4:28-31
- அப்போஸ்தலர் 17:22-27
- 2 நாளாகமம் 15:1-4
- பிரசங்கி 12:1, 13-14
- ஏசாயா 55:6
- 2 நாளாகமம் 7:14
- லூக்கா 19:1-10

# 2.தேவன

உபயோகப்படுத்தப் பட்டுள்ள வசனங்கள்:

1. அப்போஸ்தலர்17:24-30
2. சங்கீதம் 135:15-17
3. எரேமியா 10:5
4. உபாகமம் 5:8-9
5. 1 கொரிந்தியர் 10-:14
6. வெளிப்படுத்தின விஷேசம் 21:8
7. யோவான் 4:24

நோக்கம்: இப்பாடத்தின் நேக்கம் தேவன் வேதாகமத்திலுள்ள ஜீவனுள்ள தேவன் அவர் சிலையல்ல

தேவனைப்பற்றி உங்களது கருத்து என்ன? நீங்கள் எந்த தேவனை வழிபடுகிறீர்கள்? (இந்தக் கேள்விகள் படிப்பவரது பின்னனியையும் நம்பிக்கைகளையும் அறிந்து கொள்ள உதவும்) நாம் தேவன் யாரென்பதைக் காண்போம் அப்போஸ்தலர் 17: 24 ஐ வாசிக்கவும்

அப்போஸ்தலர் 17:24-30

வ 24 இந்த வசனத்தின் படி தேவன் யார்? (படைத்தவர்) வேதாகமத்தின் படி தேவன் எங்கு வசிக்கிறார்? (தேவன் மனிதர்கள் கட்டிய கட்டிடங்களில் வசிப்பதில்லை.)
வ 25 தேவனுக்கு நம்மிடமிருந்து ஏதேனும் தேவைகளுண்டா? (இல்லை) ஏன்? (ஏனைனில் அவர்தாமே நமக்கு சகலத்தையும் கொடுக்கிறார்.)
வ 26 தேவன் நம்மைப்படைத்து பல்வேறிடங்களில் வாழ வைத்துள்ளார் - (சென்னை, மதுரை போல) நீங்கள் ஏன் இங்கு இருக்கிறீர்கள்? (அது தேவனுடைய திட்டம்) ஏன்? (நாம் அவரைத்தேடி, கண்டடைந்து கொள்வதற்காக) தேவன் நம்முடன் உறவாட விரும்புகிறார். சிலர் நினைப்பதைப்போல அவர் மலையுச்சிகளிலும் கடல் கடந்து தீர்த்த யாத்திரை செல்லும் தொலைவில் இருக்கிறாரா? (இல்லை. வேதம் அவர் நம்மருகேயே உள்ளார் எனக்கூறுகிறது. நாம் அவரைத் தேடினால் கண்டுபிடிப்போம்)
வ 28 நாம் அவரது சந்ததியார் என்றால் என்ன பொருள்? (நாம் தேவனின் பிள்ளைகள்) நமக்கு உயிர்-வாழ்க்கை உள்ளதா? (ஆம்) அப்படியானால் தேவன் எப்படி இருக்கிறார்? நாம் யாருடைய பிள்ளைகள்? அவர் உயிரோடிருக்கிறாரா? இறந்துவிட்டாரா? (அவர் உயிருள்ளவர். நம் தேவன் ஜீவனுள்ள தேவன்)

வ 29 தேவன் மனிதனின் கற்பனையிலும், திறமையிலும் விளைந்த சிலையாகவோ, ஓவியமாகவோ இருக்க இயலுமா? நம்மைப் படைத்தவர் யார்? (தேவன்) நாம் தேவனைப் படைக்க இயலுமா? (இல்லை) இப்போதோ உலகில் அதுதான் நடக்கிறது. கடைவீதியில் தேவனை ஒருவிலை கொடுத்து வாங்குகிறார்கள். அந்த சிலை களிமண்ணானால் ரூ. 10, அது ஓவிய வண்ணந் தீட்டப்பட்டிருந்தால் ரூ. 100 அதுவே தங்கத்தில் செய்யப்பட்டிருந்தால் ரூ. 1,00,000 மேலும் வைரங்கள் பொருத்தப்பட்டிருந்தால் கோடிக்கணக்கில் விலை பெரும். உலோகமோ, அழகிய ஓவியமோ அதைத் தேவனாக ஆக்க முடியுமா? மனிதர்கள் படைக்கப்பட்ட பொருட்களைத் தேவனென்று கருதி சிலைகளையும் ஓவியங்களையும், படங்களையும், சூரிய சந்திரனையும், பாம்பு போன்றவற்றையும் வழிபடுகிறார்கள், தேவனையோ வழிபடுவதில்லை.
வ 30 ஜீவனுள்ள தேவனைக் குறித்து நாம் அறிந்து கொண்ட பின்பு நம்மிடம் தேவன் என்ன எதிர்பார்க்கிறார்? (நாம் மனந்திரும்ப எதிர்பார்க்கிறார்) மனந்திரும்புதல் என்றால் முற்றிலும் திசைமாறுதல் - அவர் நம்மை சிலைகளை வழிபடுவதிலிருந்து விலகி அதை மீண்டும் செய்யாதிருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

2. சங்கீதம் 135: 15-17 இந்த வசனம் சிலைகள் உயிரற்றவை என்ற உண்மையை நமக்கு விளக்குகிறது. 1. சிலைகளோ மனிதர்களால் உருவாக்கப் பட்டவை. ஆகவே கேள்வி என்னவெனில் மனிதன் தேவனை உருவாக்க இயலுமா? (மனிதர்கள் படைத்தவரை விட்டு படைக்கப்பட்டவைகளை வழிபடுகிறார்கள்) 2. சிலைகளுக்கு சரிர அங்கங்கள் இருந்தாலும் அவைகளால் அவற்றைப் பயன்படுத்த இயலாது. அவைகள் மனிதர்களின் வேண்டுதல்களைக் கேட்க இயலாது. மனிதர்கள் சிலைகளைக் காட்டிலும் சிறந்தவர்கள் ஏனெனில் அவர்களால் கேட்க, பார்க்க, புரிந்து கொள்ள இயலும். ஆயினும் இவையெல்லாம் நம்மை தேவனாக்க முடியாது. 3. சிலைகளுக்கு மூச்சு (உயிர்) இல்லை.

3. எரேமியா 10:5 1) சிலைகளோ வயல்வெளிகளிலுள்ள சோளக்காட்டு பொம்மை களைப்போல உள்ளன. அந்த பொம்மைகளால் ஏதும் செய்ய முடியாது எனினும் பறவைகள் அவைகளைக் கண்டு அஞ்சுகின்றன. சிலைகளால் ஏதும் செய்ய இயலாது எனினும் அவை பற்றிய கட்டுக்கதைகளால் அவற்றை விட்டுவிட அஞ்சுகிறார்கள். விக்கிரகங்கள் பலமற்றவை அவற்றைக்கண்டு அஞ்சவேண்டாம். 2) சிலைகளைச் சுமந்து செல்ல வேண்டும் ஏனெனில் அவற்றால் நடக்க இயலாது. நம் தேவனுக்கே நாம் நடக்க உதவவேண்டுமானால் பலவீனமான மனிதர்களாகிய நம் நிலை என்ன? 3) சிலைகளைக் கண்டு பயப்பட வேண்டாம் அவைகளால் உங்களை ஏதும் செய்ய முடியாது. சிலைகளைக் குறித்த எல்லா மூடநம்பிக்கைகளையும் விட்டொழியுங்கள்.

உங்களிடமுள்ள மூடநம்பிக்கைகள் எவை? பத்துக் கட்டளைகளில் ஒன்று குறிப்பாக கூறுவதைக் காண்பாம்.

4. உபாகமம் 5:8-9 தேவன் நாம் எந்த வடிவத்திலும் சொரூபங்களை உருவாக்கக் கூடாதெனக் கட்டளையிடுகிறார். பின்பு அதிக முக்கியமாக நாம் சிலைகளுக்குத் தலை வணங்கக் கூடாதெனக் கட்டளையிடுகிறார். நாம் தேவனுக்குக் கீழ்படியாமற் போகலாமா? ஆகவே, நாம் சிலைகளுக்கும், படங்களுக்கும், ஆட்களுக்கும் தலைவணங்குவதை விட்டு படைத்த தேவனைத் துதிப்போம். புதிய ஏற்பாட்டிலும் பல வசனங்கள் சிலை வழிபாட்டைக் கண்டிப்பதாக உள்ளன.

5. 1 கொரிந்தியர் 10:14 சிலைவழிபாட்டை விட்டு விலகியோடுங்கள்! அதற்கு நீங்கள் தயாரா? காட்டு மிருகங்களைக் கண்டால் நாம் என்ன செய்வோம்? நாம் ஓடிவிடுவோம், தப்பிப்பிழைத்தோமென ஓட்டம் பிடிப்போம். மீண்டும் அந்த இடத்திற்குச் செல்ல மாட்டோம்.!

6. வெளிப்படுத்தல் 21:8 இங்கு சிலைவழிபாடு கொலை மற்றும் விபச்சாரத்துடன் இணைத்துப் பேசப்படுகிறது. அப்படிப்பட்டவர்களின் முடிவோ நரகம்.

7. யோவான் 4:24 இயேசுவே தேவன் ஆவியாயிருக்கிறார் எனக் கூறுகிறார். அதாவது தேவனுக்கு உருவமில்லை. ஆகவே நாம் அவரை அரூபியாக (உருவமற்றவராகவே) வழி பட வேண்டும்.

முடிவு:

இன்று என்ன கற்றுக் கொண்டீர்கள்? இந்தப்பாடத்தைப் பற்றி எப்படி உணருகிறீர்கள்? இந்தப்பாடத்தின் மூலம் தேவனைப்பற்றிய உண்மைகளை உணர்ந்து கொண்டீர்களா? தேவனைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா? தேவனைப் பிரியப்படுத்த சிலை வழிபாட்டை முற்றிலும் கைவிட வேண்டும். நீங்கள் அதைச் செய்யத் தயாரா?

# 3. இயேசு

உபயோகப்படுத்தப் பட்டுள்ள வசனங்கள்

1. கொலோசெயர் 2:9
2. மாற்கு 4:35-41
3. மாற்கு 1:40-42
4. லூக்கா 7:36-39, 48-50
5. 1 யோவான் 3:5
6. உபாகமம் 5:7
7. அப்போஸ்தலர் 4:12
8. யோவான் 14:6

இது கிறிஸ்துவப் பின்னணியைச் சேராதவர்களுக்கு எடுக்க வேண்டிய இரண்டாம் பாடம்.
உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். இயேசுவைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டதுண்டா? இயேசுவைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? நான் உங்களுக்கு இயேசுவைப் பற்றி போதிக்கிறேன்.

1. கொலோசெயர் 2:9 இயேசு சரிரத்தில் வந்த தேவன் என இவ்வசனம் சொல்கிறது. தேவனிடத்தில் காணப்படும் அனைத்துப் பண்புகளையும் இயேசுவினிடத்தில் காணமுடியும். அப்படியானால் இயேசுவுக்குப் பரலோகத்திலுள்ள தேவனுடைய சகல குணாதிசியங்களும் இருந்திருக்க வேண்டும். பின்வரும் 3 பத்திகளில் அதைக் கற்கப் போகிறோம்.
2. மாற்கு 4:35-41 இயேசுவுக்கு காற்றின் மீதும் கடலலைகள் மீதும் கூட அதிகாரம் இருந்தது. இயற்கையின் சத்துவங்கள் மீது யாருக்கு அதிகாரம் உண்டு? தேவனுக்கு. அப்படியானால் இயேசுதான் தேவன். அவர் சர்வ வல்லமையுள்ளவர்.
3. மாற்கு 1: 40-42 இயேசு எல்லா வியாதிகளையும் குணப்படுத்தினார். அவரால் எந்தமனிதரையும் குணப்படுத்த முடிந்தது. இயேசுவும் தேவனைப் போல இரக்கம் நிறைந்தவராக இருந்தார். அவர் எளியவர்களையும் நேசித்தார். தொழுநோயாளியைத் தொட்டார். ஏழைகள் மீது மிகவும் பரிவு கொண்டிருந்தார்.
4. லூக்கா 7: 36-39, 48-50 இந்தப் பெண்மணி மிகுந்த பாவத்தில் இருந்தாள். ஊரார் அனைவருக்கும் அவளது பாவங்கள் தெரிந்திருந்தது. ஆயினும் இயேசு அவள் மீது பரிவு கொண்டார். இயேசு பாவிகளை நேசிக்கிறார். யாரால் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும்? தேவனால் மட்டுமே. இயேசு இந்தப் பெண்ணைத் தேவனைப் போல மன்னித்தார். இந்தப் பெண்ணின்

பாவத்தை மன்னித்த இயேசுவால் உங்கள் பாவங்களையும் மன்னிக்க முடியும்.

5. 1 யோவான் 3:5 இயேசு நம் பாவங்களை நிவர்த்தி செய்ய வந்தார். ஆனால் அவரது வாழ்க்கையில் ஏதேனும் பாவம் செய்தாரா? இல்லை. யாரிடம் எந்தப்பாவமும் காணப்பட முடியாது? தேவனிடம் மட்டுமே. அப்படியானால் இயேசு யார்? அவரே தேவன் என நான் நம்புகிறேன் பாவமில்லாத ஒருவராலேயே பாவத்தில் உள்ள மற்றொருவரை காப்பாற்ற இயலும். தேவனாக இருக்க வேண்டுமானால் பாவமே இருக்கக் கூடாது. ஒரு பாவம் இருந்தாலும் அவர் தேவனாக இருக்க முடியாது. மற்ற தேவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர்கள் பாவமில்லாதவர்களா? அவர்கள் பரிபூரணமானவர்களா? அவர்கள் பரிபூரண சற்குணராய் இல்லாதிருந்தால் தேவனாய் இருக்க முடியுமா?

6. உபாகமம் 5:7 தேவன் தம் ஒருவரையேயன்றி வேறே தேவர்களை வழிபடக் கூடாதெனக் கட்டளையிடுகிறார். ஏனெனில் வேதாகமத்தில் ஒரே ஒரு தேவன்தான் இருக்கிறார்.

7. அப்போஸ்தலர் 4:12 இயேசுவின் ஒரே நாமத்தினாலேயே மட்டுமே உலகம் முழுதும் இரட்சிக்கப்படும். வேறே எந்த நாமத்தினாலுமல்ல. இயேசுவின் பெயராலே மட்டுமே நாம் பரலோகத்திற்கு செல்ல முடியும்.

8. யோவான் 14:6 இயேசு நானே வழி என்றார். அப்படியெனில் அவரையன்றி பரலோகம் செல்ல வேறேதும் வழிகளில்லை. நீங்கள் வேறுவழிகளைத் தேடிப் பார்த்தாலும் வேறு வழிகள் ஏதும் இல்லை. இயேசுவே சத்தியமாக இருக்கிறார். எல்லா மதங்களிலும் சத்தியங்கள் இருக்கலாம் ஆனால் இயேசுவிடமோ சத்தியம் பரிபூரணமாய் நிறைந்து இருக்கிறது. இயேசுவே ஜீவன் அவரால் மாத்திரமே நாம் நித்திய ஜீவனை அடைந்து கொள்ள முடியும்.

முடிவு:
இன்று இயேசுவைப் பற்றி என்ன கற்றுக்கொண்டீர்கள்? இயேசு யார்? மற்ற தேவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் அவரை மட்டுமே பின்பற்ற வேண்டும். நீங்கள் இயேசுவையும் மற்ற தேவர்களையும் ஒரே நேரத்தில் பின்பற்ற இயலாது. இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை என்னவென்று அழைக்கிறார்கள்? (கிறிஸ்தவர்) நீங்கள் இயேசுவைப் பின்பற்றினால், மற்றவர்கள் உங்களை என்ன சொல்லி அழைப்பார்கள்? (கிறிஸ்தவர்) நீங்களும் அப்படி அழைக்கப்பட பழகிக்கொள்ள வேண்டும்.

# 4. இயேசுவின் போதனைகள்

உபயோகப்படுத்தப் பட்டுள்ள வசனங்கள்

1. யோவான் 3:1-5
2. யோவான் 3:16-18
3. யோவான் 5:5-6
4. யோவான் 6:35
5. யோவான் 8:12
6. யோவான் 8:46
7. யோவான் 11:25
8. யோவான் 12:48
9. யோவான் 20:29
10. யோவான் 14:6

இந்தப் பாடம் முழுதும் யோவான் சுவிஷேசத்திலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாடம் இயேசுவின் போதனைகளை அறிந்து கொள்ளவும் ஆழ்ந்த மன உறுதி ஏற்படவும் பயன்படும்.

1. யோவான் 3:1-5 இயேசு போதகர்களுக்கும் போதிக்கிறார். நாம் தேவனின் இராஜ்யத்தில் நுழைய மறுபடியும் பிறக்க வேண்டும் என்றார். அதாவது நம் வாழ்க்கையை மீண்டும் புதிதாகத் துவக்க வேண்டும். நீங்கள் மீண்டும் பிறக்க விரும்புகிறீர்களா? இயேசு உங்கள் வாழ்க்கையைப் புதிதாய் துவக்க வாய்ப்புத் தருவார்.

2. யோவான் 3:16-18 தேவன் கிறிஸ்தவர்களை மட்டுமல்ல முழு உலகத்தையும் நேசிக்கிறார். இயேசு எல்லா மனிதருக்காகவும்தான் வந்தார். இயேசு கிறிஸ்தவர்களின் தேவன் என அநேகர் நினைக்கிறார்கள். ஆனால் வேதமோ, இயேசு எல்லாருக்காகவும் வந்தாரென்றும், சகல இனம், ஜாதி, மதப் பின்னணி களைச் சேர்ந்தவர்களும் இரட்சிக்கப்படவே அவர் விரும்புகிறார் என்றும் அவர்கள் இயேசுவை விசுவாசித்தால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் எனக்கூறுகிறது.

3. யோவான் 5:5-6 இந்தமனிதன் 38 ஆண்டுகளாக நோயுற்றிருந்தான். நாமோ, ஆத்மீகமாக பாவத்தினால் நேயுற்றிருக்கிறோம். ஒருவேளை இயேசு உங்களைச் சந்தித்தால், நீங்கள் நலமடைய விரும்புகிறீர்களா? நீங்கள் மாற விரும்புகிறீர்களா? எனக் கேட்பார். ஒருவேளை அதுதான் உங்கள் வாழ்க்கைக்குக்

கிடைத்த ஒரே வாய்ப்பாகக் கூட இருக்கலாம். வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

4. யோவான் 6:35 இயேசு தம்மை நாடி வந்தவர்களை போஷிக்கிறார். அவரே ஜீவ அப்பமாக - ஆத்மீக உணவாக இருக்கிறார்.
5. யோவான் 8: 12 அவரே ஒளியாக இருக்கிறார். அவரைப்பின்பற்ற விரும்பினால் இருளை விட்டு முற்றிலும் வெளி வர வேண்டும். நீங்கள் இன்று ஒளியில் இருக்கிறீர்களா? அல்லது இருளிலா? இயேசு உங்களை ஒளிக்குள் கொண்டுவர முடியும்.
6. யோவான் 8:46 இயேசுவிடம் பாவமேதும் இல்லை. அவர் குற்றம் செய்திருந்தால் அதை நிரூபிக்கும் படி வெளிப்படையாகவே அவர் சவாலிட்டார்.
7. யோவான் 11:25 இயேசுவே உயிர்த்தெழுதல். அவர் நித்திய வாழ்க்கையை நமக்கு வாக்களித்திருக்கிறார். ஏனெனில் மரணத்திற்குப் பிறகு மறுபிறவி கிடையாது, நாமனைவரும் நியாத்தீர்ப்பை அடைவோம். (எபிரெயர் 9:27) மரணத்தினின்று அவரே உயிர்த்தெழுந்ததனால், நமக்கு உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையை ஊட்டுகிறார்.
8. யோவான் 12:48 இயேசுவின் வார்த்தைகளே நம்மை இறுதி நாளில் நியாயந் தீர்க்கப் போகின்றன. நாம் அவரது வார்த்தைகளை வாசிக்கவும் கற்றுக் கொள்ளவும் மட்டுமின்றி, கீழ்ப்படியவும் வேண்டும்.
9. யோவான் 20:29 நாம் யாரும் இயேசுவைக் கண்டதில்லை. நாம் விசுவாசித்தால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம். ஆகவே இயேசுவின் மேல் உங்கள் நம்பிக்கையை வையுங்கள்.
10. யோவான் 14:6 இயேசு நானே வழி என்றார். அப்படியெனில் அவரையன்றி பரலோகம் செல்ல வேறேதும் வழிகளில்லை. நீங்கள் வேறுவழிகளைத் தேடிப் பார்த்தாலும் வேறு வழிகள் ஏதும் இல்லை. இயேசுவே சத்தியமாக இருக்கிறார். எல்லா மதங்களிலும் சத்தியங்கள் இருக்கலாம் ஆனால் இயேசுவிடமோ சத்தியம் பரிபூரணமாய் நிறைந்து இருக்கிறது. இயேசுவே ஜீவன் அவரால் மாத்திரமே நாம் நித்திய ஜீவனை அடைந்து கொள்ள முடியும்.

முடிவு:
இயேசுவைப் போல யாரும் இல்லை. இயேசுவே ஒரே வழி.
நீங்கள் இயேசுவே ஒரே வழி என நம்புகிறீர்களா? நீங்கள் அவரைப் பின்பற்ற விரும்புகிறீர்களா?

# 5. தேவனுடைய வார்த்தை

உபயோகப்படுத்தப் பட்டுள்ள வசனங்கள்

1. 2 தீமோத்தேயு 3:16-17
2. எபிரெயர் 4:12-13
3. யோவான் 8:31-32
4. மத்தேயு 15: 1-9
5. 1 தீமோத்தேயு 4:16
6. அப்போஸ்தலர் 17:10-12
7. மத்தேயு 4:4

நோக்கம்: விசுவாசம் செய்தியைக் கேட்பதனாலேயே வருகிறது. செய்தியோ, கிறிஸ்துவின் வார்த்தைகளிலிருந்தே வருகிறது. (ரோமர் 10: 17) இங்ஙனம் தேவ வார்த்தைகளை வாசிக்கும் போது கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம் தோன்றும். வேதாகமத்தை ஒருவர் தம் வாழ்வின் நிலைப்பாடாகக் கொண்டால் (அதாவது சொந்தக் கருத்துக்கள், உணர்ச்சிகள், சக மனிதர்களின் கருத்துக்கள், குடும்பப் பாரம்பரியங்களுக்கும் மேலாக) அதனடிப்படையில் வாழ்ந்தால், இயேசுவின் வாயிலாகக் கிட்டும் இரட்சிப்பை அறிந்து கொள்வார்கள்.

1. 2 தீமோத்தேயு 3:16-17 அ) எல்லா வேத வாக்கியங்களும் தேவனால் அருளப்பட்டவை. ஆ) அவற்றை நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைப் படுத்த வேண்டும்.
2. எபிரெயர் 4: 12-13 அ) தேவ வசனங்கள் ஜீவனும், வல்லமையும் உள்ளதாக இருக்கின்றன. ஆ) ஒவ்வொரு வசனமும் நம்மை வெட்டுகின்றன (நெகிழச் செய்கின்றன) இருபுறமும் கூரான வாளுக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. இ) அப்படி வெட்டப்படுவது நன்மைக்கே - பாவம் வெட்டுண்டு போகிறது.
3. யோவான் 8: 31-32 அ) மனதளவிலுள்ள நம்பிக்கை போதுமானதன்று. நம் உணர்ச்சிகளின் படியும் போகக் கூடாது. ஆ) இயேசுவின் போதனைகளைக் கைக்கொண்டால் மட்டுமே நாம் கிறிஸ்தவராக (சீடராக) இருக்க முடியும்.
4. மத்தேயு 15: 1-9 அ) தேவனுடைய வார்த்தையை மீறி செய்யப்படும் எந்தப் பாரம்பரியமான ஆராதனையும் வீணிலே செய்யப்படும் ஆராதனையே ஆகும். ஆ)நம் பாரம்பரியங்களின் நிமித்தம் தேவனுடைய வார்த்தைகளை நாம் தள்ளி விடாத படி இயேசு நம்மை எச்சரிக்கை செய்கிறார்.

5. 1 தீமோத்தேயு 4:16 அ) உங்கள் வாழ்க்கையையும் உங்கள் போதனைகளையும் நெருக்கமாய் கவனியுங்கள். ஆ) உங்கள் வாழ்க்கையில் எது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது? வாழ்க்கையா அல்லது போதனைக் கருத்துக்களா? ஒரு விமானத்திற்கு எந்த இறக்கை மிக முக்கியம்? (இரண்டுமே)
6. அப்போஸ்தலர் 17:10-12 அ) பேரோயா நகர மக்கள் தேவ வசனத்தை வாஞ்சையாய் கேட்டதுமின்றி தேவ வசனத்தை ஆராய்ந்து பார்த்ததினாலே வேதாகமம் அவர்களை நற்குணசாலிகள் எனப் போற்றுகின்றது. ஆ) வேதம் படிக்கிறவர் நாள்தோரும் வேதம் வாசித்து, தியானிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள உற்சாகப் படுத்துங்கள்.
7. மத்தேயு 4:4 அ) வேதம் ஏன் வாசிக்க வேண்டும்? ஏனெனில் இயேசு, மனிதன் அப்பத்தினாலே மட்டுமல்ல தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினலேயும் பிழைப்பான் என்றார். ஆ) நாம் உயிர்வாழ உணவு எவ்வளவு அவசியமோ, அதுபோல நம் விசுவாசம் நிலைத்திருக்க தேவனுடைய வார்த்தை அவசியம்.

முடிவு:
வேதாகமத்தை கவனமாகவும் அக்கரையாகவும் கற்றுக்கொள்ளக் கற்பியுங்கள்.

இதர உபயோகப்படக்கூடிய வசனங்கள்:
யாக்கோபு 1:22-25 மத்தேயு 7: 15-20, 24-27
ரோமர் 10: 17 சங்கீதம் 19: 7-11
சங்கீதம் 119 : 11, 105
மேலும் கற்றுக்கொள்ள வேண்டிய வசனங்கள்
(இவை கிறிஸ்துவின் மேல் விசுவாசங் கொள்ள தடுமாறுகிறவர்களுக்கு உதவும்)

| தீர்க்க தரிசனம் | நிறைவடைந்தது | தீர்க்கதரிசனம் | நிறைவடைந்தது |
|---|---|---|---|
| ஆதியாகமம்49:10 | மத்தேயு 1:1-17 | ஏசாயா 42:1-4 | மத்தேயு 12:15 |
| ஏசாயா 7:14 | மத்தேயு 1:22 | சங்கீதம் 78:2 | மத்தேயு 13:34-35 |
| மீகா 5:2 | மத்தேயு 2:5 | மீகா 7:6 | மத்தேயு 10:35-36 |
| ஓசியா 11:1 | மத்தேயு 2:15 | மல்கியா 3:1 | மத்தேயு 11:10 |
| எரேமியா 31:15 | மத்தேயு 2:17-18 | ஏசாயா 6:9-10 | மத்தேயு 13:13-15 |
| ஏசாயா 40:3 | மத்தேயு 3:3 | சங்கீதம் 8:2 | மத்தேயு 21:16 |
| ஏசாயா 9:1-2 | மத்தேயு 4:13-16 | சகாரியா 9:9 | மத்தேயு 21:1-5 |
| ஏசாயா 53:4 | மத்தேயு 8:16-17 | சுகாரியா 13:7 | மத்தேயு 26:31 |

# 6. பாவம்

உபயோகப்படுத்தப் பட்டுள்ள வசனங்கள்:

1. ஏசாயா 59:1-2
2. ரோமர் 3:23
3. ரோமர் 6:23
4. கலாத்தியர் 5:19-21
5. மாற்கு 7: 21-23
6. யாக்கோபு 4:17
7. யாக்கோபு 5:16,
8. 1 யோவான் 1:9

நோக்கம்: எல்லாரும் கிருபையினாலே இரட்சிக்கப் படவேண்டுமென நாம் விரும்புகிறோம். பாவத்தை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டால் கிருபைக்கு இடமில்லாமற் போகும். ஆம், எல்லாரும் பாவம் செய்திருக்கிறார்கள். (ரோமர் 3:23) ஆகவே நம் அனைவருக்கும் தேவனின் கிருபை நிச்சயமாகத் தேவை. (ரோமர் 6:23) இவ்வாறாக, இப்பாடத்தின் நோக்கம் பரிசுத்த தேவன் எவ்வாறு நம்மைக்காண்கிறாரோ அவ்வாறு நம்மை நாம் காண்பதுவே! நாமோ முழுதும் பாவத்தினாலே நிரம்பி தேவனை விட்டு விலகித் தொலைந்து போயிருக்கிறோம். இந்த ஞானம் நாம் மனந்திரும்பவும், மன்னிப்பைத் தேடவுமுள்ள வாஞ்சையை கொண்டுவருகிறது.

1. ஏசாயா 59: 1-2 நம் பாவங்கள் நம்மைத் தேவனை விட்டு விலக்கியுள்ளன. நாம் பாவம் செய்கையில் நமக்கும் தேவனுக்குமிடையில் ஒரு சுவற்றைக் கட்டுவதைப் போல ஆகிறது. அது தேவனின் தவறன்று. நாம் தான் அச்சுவற்றைத் தகர்த்து தேவனை அண்ட வேண்டும். பின் வரும் படம் நம் நிலைமையை விளக்கும்.

2. ரோமர் 3:23 எத்தனை மனிதர்கள் பாவம் செய்திருக்கிறார்கள்? (எல்லாரும்) ஆகவே, நம் அனைவருக்கும் பாவ மன்னிப்புத் தேவை. ஒரே பொய் பேசினாலும் நாம் பொய்யர், ஒரே பாவம் செய்தாலும் நாம் பாவிகள். நாம் அனைவரும் பாவிகள் மற்றவர்களிடமிருந்து வேறே ஏதும் வேறுபாடுகள் இல்லை. நம் அனைவருக்கும் மன்னிப்பு அவசியம். நாம் மற்றவர்களோடு ஒப்பிடும் போது எப்படி உணர்கிறோம்? மற்றவரைவிட பரவாயில்லை என நினைக்கிறோம். ஆனால் தேவனுடன் ஒப்பிடுகையிலோ, மிகக் குறைவுபட்டவர்களாவே இருக்கிறோம். தேவனுடைய உன்னத மகிமைக்கு எப்போதுமே நாம் எவ்வளவு

சிறந்தவர்களாயிருந்தாலும் சென்றடைய முடியாது. நாம் குறைவுபட்டவர்கள்தான்.

3. ரோமர் 6:23 நம் பாவங்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்து நாம் மரண தண்டனைக்குப் பாத்திரவான்கள். (ஆத்மீக மரணம் - சரிர மரணமல்ல) அதாவது நிரந்தரமாக தேவனிடமிருந்து பிரிக்கப்பட வேண்டியவர்கள் - நரகத்திலே தூக்கி எறியப்படத் தகுதியானவர்கள். ஆனால் அந்த பாவச்சுவற்றை இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் தகர்க்க முடியும். அவர் நமது பாவங்களை மன்னித்து நமக்கு நித்திய வாழ்க்கையைத் தர முடியும். வேதாகமத்தில் எவ்விதமான பாவங்களைப் பற்றி கற்கிறோம்? நாம் செய்யத் தவறுவதால் நேரும் பாவங்கள் (யாக்கோபு 4:17) நாம் செய்கிற பாவங்கள்.

4. கலாத்தியர் 5:19-21
செய்கிற பாவங்கள்:
    - விபச்சாரம்: உடலுறவு தொடர்பான பாவங்கள்
    - இச்சைப் பார்வை பார்த்தல்: கேலி கிண்டல் செய்தல், மனம் நோகச் சொல்லும் வார்த்தைகள், பேருந்து மற்றும் பொது இடங்களில் பெண்களை அநாகரிகமாக தொடுதல், இடித்தல்...
    - ஆபாச புத்தகங்கள், திரைப்படங்கள், இணையதளங்கள், புகைப்படங்கள் போன்றவை
    - சுயஇன்பம் செய்தல்
    - திருமண உறவுக்கு வெளியே ஏற்படும் தொடர்புகள். (வேசித்தனம்) அண்டை வீட்டார், ஆண் - பெண் சிநேகிதர்கள். விபச்சாரிகளிடம் செல்லுதல், உறவினர் இடையே ஏற்படும் ஆபாச உறவுகள். (சகோதர - சகோதரி - மாமா - மாமி - போன்றவை)
    - காம விகாரம் : ஓரினச்சேர்க்கை - ஓரினத்தைச் சேர்ந்தவர்கள் (ஆணோடு ஆண் - பெண்ணோடு பெண்) ஈடுபடும் ஆபாச உறவுகள். (தொடுதல், ஒருவருக்கொருவர் சுயஇன்பத்தில் ஈடுபடுதல், வாய்வழி, ஆசனவழி உறவுகள்)
    - குழந்தைகளை கெடுத்தல்: குழந்தைகள் மற்றும் சிறார்களைத் தங்கள் உடற்பசிக்கு உட்படுத்தி ஆபாச செயல்களில் ஈடுபடுதல்.
    - அசுத்தம்: பொய் பேசுதல், பரிட்சையில் ஏமாற்றுதல், பொய் சான்றிதழ்கள், கெட்ட வார்த்தை பேசுதல். திருடுதல்

- பெருந்தீனி - அளவுக்கதிகமாக உண்பதும், உறங்குவதும், சோம்பல், வீணில் உண்டுகளித்து நேரத்தைக் கழிப்பது.
- விக்கிரக ஆராதனை: சிலை, படங்கள், ஓவியங்கள், கற்கள், சாமியார்கள், குருமார்கள், விலங்குகள் மற்றும் தேவனுக்கு மேலாகக் கருதப்படும் எதை ஆராதிப்பதும் விக்கிரக ஆராதனையாகும்.
- பில்லி சூனியம் : மாந்திரிகம், தேவனைத் தவிற மற்ற சக்திகளில் நம்பிக்கை வைத்தல், கைரேகை, ஜோதிடம், எண்ஜோதிடம், ஜாதகங்கள் போன்றவை.
- பகைகள்: விரோதங்கள் - மன்னிக்காமல் பகைமை பாராட்டுதல் சொத்துச் சண்டைகள், உங்களை துன்பப் படுத்திய எவரையேனும் எக்காரணங் கொண்டும் மன்னியாதிருத்தல்.
- வைராக்கியங்கள் - கோபங்கள் : மனம் பொருந்தாத உறவுமுறைகள் - தீர்க்கப்படாத மன வேற்றுமைகள் (திருமணத்தில் - சந்தேகம், அதீதப் பற்றினால் சண்டை சச்சரவுகள்.)
- சண்டைகள்: கோப மிகுதியினால், கெட்ட வார்த்தைகளில் பேசுதல், பொருட்களைத் தூக்கி எறிதல், மற்றவர்களை அடித்தல், கதவுகளை அறைந்து சாத்துதல் போன்றவை
- சுயநலம்: தற்பொழிவு - தம்மைப்பற்றி மட்டுமே அக்கரைப் படுதல். தன் வளர்சிக்காக எவரையும் வளரவிடாது தடுத்தல், எல்லாவற்றிலும் எனக்கு என்ன ஆதாயம் கிட்டும் என்ற மனப்பான்மை.
- பிரிவினைகள்:
- மார்க்க பேதங்கள்: பிரிவினைக் குழுக்களை ஏற்படுத்துதல். ஒற்றுமையான குழுவுக்குள் வேற்றுமைகளை விதைத்து பிரிவு ஏற்படுத்துதல்.
- பொறாமைகள்: மற்றவரது வளர்ச்சி மற்றும் சாதனைகளைக்குறித்து பொறாமை கொள்ளுதல். தேவன் கொடுத்துள்ளவைகளைக் கொண்டு திருப்தியடையமை.
- வெறிகள்: போதைப்பொருள், குடிப்பழக்கம், புகையிலை, புகைப்பிடித்தல், பீடா ஜாகிரி வஸ்துகளை உபயோகித்தல்.
- களியாட்டுக்கள்: குழுவாகச் சேர்ந்து செய்யும் எந்தத்தீமையான செயலும் களியாட்டு ஆகும்.

5. மாற்கு 7:21-23 பாவம் இதயத்திலிருந்து வருகிறது. ஆகவே நாம் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களையும் சூழ்நிலைகளையும் குறை சொல்லலாமா? நம் பாவத்திற்கு நாமே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் நம்மை தவறு செய்யத் தூண்டினாலும் தவறு செய்வதோ முழுக்க நம் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதே.

6. யாக்கோபு 4:17 நாம் செய்யத் தவறுவதால் நேரும் பாவங்கள் - நாம் செய்ய வேண்டியதை அறிந்திருந்தும் செய்யாமற் போனால் அது பாவமாக இருக்கும்.

7. யாக்கோபு 5:16 மற்றும் 1 யோவான் 1:9 இவ்விரு வசனங்களும் பாவ அறிக்கையிடுவதைக் குறித்துப் பேசுகிறது.

   - நாம் பாவ அறிக்கையிட வேண்டும். (ஏற்றுக்கொள்ளுதல்- ஒப்புக் கொள்ளுதல்) நம்முடைய பாவங்களைத் தெளிவாக, குறிப்பிட்டு ஒவ்வொன்றாக அறிக்கையிடுதல்
   - வேதாகமம் நாம் வெளிப்படையாக நம் பாவங்களை மற்ற சகோதர - சகோதரிகளிடத்தில் ஆலோசனை பெறவும், ஜெபிக்கப்படுவதற்காகவும் அறிக்கையிட வேண்டும் என போதிக்கிறது.
   - நாம் யாருக்கு விரோதமாய் பாவம் செய்தோமோ அவர்களிடத்திலும் அறிக்கையிட்டு மன்னிப்புக் கோர வேண்டும்.

பாவ பாடத்தைக் கற்றுக்கொள்பவர் தம் பாவ அறிக்கையை எழுதக் கூடுமானால் அவற்றை எழுதிப் பட்டியலிடுமாறு உற்சாகப்படுத்துங்கள். தம் நினைவுக்கு எட்டும் வரை எல்லாப்பாவங்களையும் பட்டியலிட உற்சாகப் படுத்துங்கள். இது அவரது பாவத்தைப் புரிந்து கொள்ளவும், தேவனுக்கும் மற்றவருக்கும் விரோதமாய் பாவம் செய்திருப்பதைப் புரிந்து கொள்ளவும் உதவும். அல்லது தேவனுக்கு ஒரு பாவ அறிக்கைக் கடிதம் எழுத ஊக்கப்படுத்துங்கள். அடுத்த பாடத்திற்கு வரும்போது அக்கடிதத்தை அல்லது பாவ அறிக்கையைக் கொண்டுவரும் படிச் சொல்லுங்கள்.

இறுதியாக
உங்கள் பாவங்களை ஒவ்வொன்றாய் அறிக்கையிடுவதைக் குறித்து நீங்கள் எப்படி உணருகிறீர்கள்? உங்கள் வாழ்க்கையைக் குறித்து எவரிடமேனும் வெளிப்படையாகப் பேசியதுண்டா? நாம் இப்பாடம் படிக்கிறவருக்கு நல்

உதாரணமாக இருக்கும் விதமாக நம்முடைய பாவங்களையும் வெளிப்படையாக அறிக்கையிடுவோம்.

மற்ற உபயோகமுள்ள வசனங்கள்:

1. சங்கீதம் 32:1-5
2. நீதிமொழிகள் 28:13
3. யோவான் 3:19-21
4. அப்போஸ்தலர் 3:19
5. 2 தீமோத்தேயு 3:1-5
6. எபிரெயர் 4:13
7. 1 யோவான் 1:5-10

# 7. சிலுவை

உபயோகப்படுத்தப்பட்டுள்ள வசனங்கள்:

1. மாற்கு 14:32-65
2. மாற்கு 15: 1-20
3. லூக்கா 23: 32-34
4. மாற்கு 15: 37-57
5. 1 பேதுரு 2:21-25
6. 2 கொரிந்தியர் 5:14-15

ஆலோசனை: கிறிஸ்துவின் வாஞ்சை என்ற திரைப்படத்தை காண்பித்தபின் இந்தப்பாடத்தை கற்பிக்கவும்

நோக்கம்: தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற் காகவே அவரை அனுப்பினார்.(யோவான் 3:16-17)
இங்கே சுவிஷேசத்தின் உச்சகட்டத்தைக் காண்கிறோம். நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். இயேசுவின் அன்பான தியாகத்தினாலே இரட்சிக்கப்பட்டோம். கற்றுக் கொள்கிறவர் கிருபையின் தேவையை உணர்ந்துகொள்ள உதவுங்கள். இப்பாடம் கிருபையின் வல்லமையை உணர்ந்து கொள்ள நல்ல வாய்ப்பாகும். கற்பவர் இயேசுவின் மரணத்திற்குத் தாமும் பொறுப்பாளி என்பதை உணர்த்தும்படி போதியுங்கள். தனிப்பட்ட பொறுப்பேற்றுக் கொள்ளும்போது நன்றியுணர்ச்சியும் இயேசுவின் அன்புக்கும் தியாகத்துக்குமான சந்தோஷத்தையும் அறிந்துகொள்வார்கள். இப்பாடம் அதிக கவனத்துடன் கற்கவேண்டியதாகும். சிலுவையில் இயேசுவின் சரிர, உணர்ச்சிப் பூர்வமான, ஆத்மீகமான போராட்டங்களை நாம் கற்றுக்கொள்ளப் போகிறோம். நாம் ஜெபத்துடன் ஆரம்பிப்போம்.

1. மாற்கு 14:32-42
   - கே: இயேசு இங்கே எவ்வாறு உணர்ந்தார்? (மிகவும் வேதனையோடு கவலையும் துக்கமும் நிறைந்தவராக மரணத்தை எதிர் நோக்கியவாறு இருந்தார்)
   - கே: அவர் ஜெபிக்க ஆரம்பித்த போது சிலுவைக்குப் போக விரும்பினாரா? (இல்லை) அவரது ஜெபத்தின் இறுதியில்

அவரது மனப்பான்மை எப்படி இருந்தது? (42)? (அவர் மரிக்கத் தயாராக இருந்தார்) அதே போல உங்கள் போராட்டங்களைக்குறித்து நீங்கள் உங்கள் இதயம் மாறும் வரை நீங்களும் ஜெபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

- கே: உங்களை எப்போதாவது உங்கள் நண்பர் எவரேனும் கைவிட்டதுண்டா? அதுவும் உங்களுக்கு மிகவும் தேவைப்படும் தருவாயில்? (பகிர்ந்து கொள்ளவும்)
- கே: இயேசு இவையெல்லாம் ஏன் செய்தாரெனத் தெரியுமா? (ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களுக்காக - பொய் - பெருமை - சுயநலம் இவற்றின் காரணமாக)

2. மாற்கு 14:43-50
   - யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். உங்களுக்கு எப்போதாவது இப்படிப்பட்ட துரோகம் நடந்ததுண்டா? (பகிர்ந்து கொள்க)
   - கே: இயேசு விரும்பியிருந்தால் இங்கே அவர் என்ன செய்திருக்கலாம் ? (12000 தேவ தூதர்களை வரவழைத்து அனைவரையும் அழித்திருக்கலாம் (மத்தேயு 26:53))
   - இயேசு கைது செய்யப்பட்ட போது எல்லா சீடர்களும் என்ன செய்தார்கள்? (வ. 50 - எல்லாரும் ஓடிப்போனார்கள்)
   - கே: நீங்கள் எப்போதாவது தனிமையை உணர்ந்ததுண்டா? உலகத்திலுள்ள யாருக்குமே உங்கள் மேல் அக்கரையில்லை என்பதை உணர்ந்ததுண்டா? (பகிர்ந்து கொள்க)
   - கே: இயேசு இவையெல்லாம் ஏன் செய்தாரெனத் தெரியுமா? (ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களுக்காக - பொய் - பெருமை - சோம்பல் இவற்றின் காரணமாக)

3. மாற்கு 14: 53-65
   - இயேசுவை விசாரணை செய்தார்கள். அது எப்படிப் பட்ட விசாரணை? (அநீதியான விசாரணை) உங்களை அப்படி அநீதியாக எவரேனும் நடத்தியதுண்டா? (பகிர்ந்து கொள்க) அப்போது நாம் எப்படி நடந்து கொள்கிறோம்?
   - மூன்று ஆண்டுகளாய் அவர் குணப்படுத்தியவர்களில் எவரேனும் அவருக்குப் பரிந்து பேச முன்வந்தார்களா? நீங்கள் செய்த நற்கிரியைகளுக்காகப் பாராட்டப்படாதவர்களாய் உணர்ந்ததுண்டா? (பகிர்ந்து கொள்க)

- அவரைக் கண்களைக் கட்டி வேடிக்கை செய்தார்கள். காரி உமிழ்ந்தார்கள். அறைந்தார்கள். உங்கள் மீது எவரேனும் உமிழ்ந்ததுண்டா? நீங்கள் அடி பட்டதுண்டா?
- கே: இயேசு இவையெல்லாம் ஏன் செய்தாரெனத் தெரியுமா? (ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களுக்காக - விபச்சாரம் - பெருமை - கோபம் இவற்றின் காரணமாக)
- கே: அடுத்ததாக இயேசுவைத் தெரியுமா என பேதுருவைக் கேட்டார்கள். அவரோ மூன்று முறை தெரியாதென மறுதலித்தார். வேதாகமத்தில் லூக்கா 22:54-62 -இல் இயேசுவுக்கும் இது தெரியுமென வாசிக்கிறோம். இயேசு பேதுருவை நோக்கிப் பார்த்தார். பேதுருவோ மனங்கசந்து அழுதார்
- கே: உங்களைப் பற்றி எவரேனும் புறம் பேசுவதைக் கேட்டிருக்கிறீர்களா? அப்போது எப்படி உணர்வீர்கள். (பகிர்ந்து கொள்க)
- கே: இயேசு இவையெல்லாம் ஏன் செய்தாரெனத் தெரியுமா? (ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களுக்காக - பொய் - குடிப்பழக்கம் - இச்சைப்பார்வை இவற்றின் காரணமாக)

4. மாற்கு 15:1-15
   - இரவு முழுதும் இயேசுவை அவர்கள் அடித்து, காரி உமிழ்ந்து துன்பப்படுத்திய பின்பு அவரை மீண்டும் ஒரு விசாரணைக்கு அழைத்துச் சென்றார்கள்.
   - அவரை கொலைகாரனாகிய பர்னபாஸுடன் ஒப்பிட்டார்கள். கூட்டத்தாரிடத்தில் இவ்விருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமெனக் கூறினார்கள். அவருடைய மன நிலை எப்படியிருந்திருக்கும்.
   - பிலாத்துவோ, நியாயாதிபதியின் ஆசனத்திலிருந்தான். அவன் இயேசுவைக் குறித்து ஏதேனும் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியதாக இருந்தது. பிலாத்துவுக்கு இயேசுவைப் பிடித்திருந்ததா?
   - பிலாத்து அந்தக் கூட்டத்தினருக்கு காரணங்களைக் காட்டி விளக்க முயற்சித்தான். (என்ன குற்றம் செய்தான்?) ஆனால் அவர்களுக்கு அவரைப்பிடித்திருந்ததா? (இல்லை, அதிக கூக்குரலிட்டார்கள்)
   - ஒரு விவாதத்தில் தோல்வியடைபவர்கள் என்ன செய்வார்கள்? (அதிகம் கத்துவார்கள்)

- மத்தேயு 27:24இல் பிலாத்து இவ்விஷயத்தில் தம்முடைய கையைக்கழுவினான். அதனால் அவன் குற்றமற்றவனாக இருப்பானோ? (பிலாத்து குற்றமற்றவனாக இருக்க விரும்பினாலும், இயேசுவின் பிரச்சனையில் முடிவெடுப்பதிலிருந்து தப்பிப்பவனாகவே இருந்ததனால் - அது இயேசுவுக்கு விரோதமான முடிவாக மாறிற்று.)
- இயேசுவை வாரினால் அடிப்பித்தார்கள். வாரினால் அடிப்பதென்றால் எப்படியிருக்குமென்று அறிவீர்களா? (ஆடைகளை உறிந்து, தோலால் ஆன வாரினால் அடிப்பார்கள். அந்த வாரின் நுனிகளில், கண்ணாடித் துண்டுகளோ, எலும்புத் துண்டுகளோ கட்டப்பட்டிருக்கும். மீண்டும் மீண்டும் அடிக்கும் போது இரத்தம் வழிய ஆரம்பிக்கும். வலி அதிகரிக்கும் முதுகு கொத்துக்கறி போல கீறப்படும்வரை அடிப்பார்கள்)
- அப்படி ஒவ்வொரு முறையும் அவர் அடிபடும் போது, இயேசு இவையெல்லாம் ஏன் சகித்தாரெனத் தெரியுமா? (ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களுக்காக - புகைப்பிடிக்கும் பழக்கம் - சுயநலம் இவற்றின் காரணமாக)

5. மாற்கு 15:16-20
   - கே: இயேசுவைச் சுற்றிச்சூழ்ந்து போர்ச்சேவகர்கள் அவரைக் கேவலப் படுத்தவும் துன்புறுத்தவும் செய்தனர். எவரையேனும் இவ்வாறு சூழ நின்று ஏளனம் செய்வதைப்பார்த்திருக்கிறீர்களா?
   - அவரது ஆடைகளைக் களைந்து ஒரு மேலங்கியை அணிவித்து அவரது தலையின் மேல் முள்ளால் செய்யப் பட்ட கிரிடத்தைச் சூட்டி கோலால் அடித்தார்கள்.
   - முட்கிரிடத்தின் மீது அடி விழும் போது என்ன நடக்கும்? (முட்கள் மேலும் ஆழமாக உட் பதிந்து வேதனையை அதிகரிக்கும்)
   - அவரது மேலங்கியை அவர்கள் உரித்தபோது அவரது முதுகில் எப்படிப் பட்ட வேதனை இருந்திருக்கும்?
   - இயேசு இவையெல்லாம் ஏன் சகித்தாரெனத் தெரியுமா? (ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களுக்காக - விபச்சாரம் - குடிப்பழக்கம் இவற்றின் காரணமாக)

6. லூக்கா 23:32-34
   - இயேசுவின் புண்ணான முதுகில் சிலுவையைச் சுமத்தி சுமக்கச் செய்தனர். பின்பு அவரது ஆடைகளைக் களைந்து கைகளிலும் கால்களிலும் ஆணி அறைந்தனர். பின்பு

சிலுவையில் நிர்வாணமாகத் தெங்கவிடப்பட்டார். சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கையில் அவரது புண்ணான முதுகு உராய்ந்து மேலும் வேதனையை அதிகப்படுத்தியது. அவரோ மிகுந்த வேதனையை அனுபவித்தார்.

- ஒருவர் எப்படி சிலுவையில் மரணம் அடைவார் தெரியுமா? (அவர்கள் மூச்சுவிட சிரமப்பட்டு ஆணிகளுக்கிடையே தங்கள் உடலை இழுத்துக் கொண்டு வேதனை மிகுதியினால் உடல் தொங்கி சக்தியெல்லாம் இழந்து மூச்சுத் திணறி மரணமடைவார்கள்.)
- இயேசு இவையெல்லாம் ஏன் சகித்தாரெனத் தெரியுமா? (ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களுக்காக - சுயநலம் - புகைப்பழக்கம் - கோபம் இவற்றின் காரணமாக)
- நீண்ட கடிய நாளுக்குப்பின் நம் வாயில் வரும் வார்த்தைகள் எப்படிப் பட்டவையாக இருக்கும்? (கடினமான - பொல்லாத வார்த்தைகள்.)
- ஆனால் இயேசுவின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கவனிப்போம். (பிதாவே இவர்களுக்கு மன்னியும்...)
- அவர் மரிக்கும் போதும் யாரைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தார்.
- சிலுவையில் யார் மரித்திருக்க வேண்டும்? இயேசுவா - நாமா?
- இரண்டு கள்ளர்கள் இருந்தார்கள். இருவருமே இயேசுவை நிந்தித்தார்கள். ஆயினும் ஒருவன் மனந்திரும்பி இயேசுவை நோக்கிப்பார்த்தான். இயேசு அவனை மன்னித்தார். இது தேவனுடைய இதயத்தை நமக்கு காண்பிக்கிறது. தேவன் நம்மை நேசிக்கிறார். இயேசு அவனை நரகத்திற்கு அனுப்பியிருக்க முடியும் ஆயினும் அவர் அப்படிச் செய்ய வில்லை. இன்று நீங்களும் மன்னிக்கப்பட முடியும். இயேசு நேரிடையாக இல்லையென்றாலும் வேதாகமம் நாம் இரட்சிக்கப்படக் கூடிய வழியை நமக்குக் காண்பிக்கிறது.

7. மாற்கு 15:37-57
   - இயேசு மரிப்பதை வாசிக்கிறோம். அவர் வேதனையின் மிகுதியில் ”என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்” எனக் கதறினார்.
   - கே: வேதாகமத்தின் படி இயேசு தேவனுடன் ஆதிமுதல் இருந்தார். இயேசு ஏன் தேவன் தம்மைக் கைவிட்டதாகச் சொன்னார்? (பாவத்தினால்) நாம் 1 பேதுரு -வுக்குத் திருப்பி வாசிப்போம்.

8. 1 பேதுரு 2:24

- இயேசு சிலுவையில் மரித்தபோது எதைச் சுமந்தார்? (நம் பாவங்களை)
- நீங்கள் பாவம் செய்யும் போது எப்படி உணர்வீர்கள்? (குற்ற உணர்ச்சி, வருத்தம், வேதனை)
- உங்கள் எல்லாப்பாவங்களுக்கான குற்ற உணர்ச்சியை ஒரே நேரத்தில் நீங்கள் உணர்ந்தால் எப்படியிருக்கும்? எல்லா மனிதர்களின் பாவங்களையும் யோசித்துப் பாருங்கள். எல்லா கற்பழிப்புகள், பொய்கள், கொலைகள், அநீதி, போன்றவை. இயேசு எல்லாப் பாவங்களுக்கான வேதனையை உணர்ந்தார். அவரே எல்லாப் பாவங்களையும் செய்தது போல உணர்ந்தார். ஏனெனில் பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. (ஏசாயா 59:1-2, கொலேசெயர் 1:21) இயேசு சிலுவையில் மரித்த போது அவருடன் தேவன் இல்லை.
- இயேசு இவையெல்லாம் ஏன் சகித்தாரெனத் தெரியுமா? (ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களுக்காக - பொல்லாத சிந்தனைகள் - ஏமாற்றுதல் - கோபம் இவற்றின் காரணமாக)
- சிலுவையைப் புரிந்து கொள்ள பின்வரும் கதை உதவும்: பிதாவாகிய தேவனும் அவரது மைந்தனாகிய இயேசுவும் பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் எல்லா மனிதர்களையும் நோக்கினார்கள். அவர்கள் உங்களையும் என்னையும் கூடக் கண்டார்கள்.

  இயேசு பிதாவை நோக்கி ”பிதாவே நான் இவர்களை நேசிக்கிறேன், இவர்களுக்கு உதவ விரும்புகிறேன். எப்படி உதவுவது?”

  ”மகனே! அவர்கள் நம்மைப்போன்றவர்கள் அல்ல. ஆகவே உனக்கு புரியாது.” என்றார் தேவன்.

  ”பிதாவே, நீர் என்னோடு இருக்கும் வரை அவர்களுக்காக எதையும் செய்ய நான் தயார்”

  ”மகனே, அவர்களுக்கு உதவ ஒரே வழிதான் உண்டு. நீயே நேரடியாக பூமிக்குச் செல்ல வேண்டும். நீயும் ஒரு மனிதனாக வாழ வேண்டும். மனிதர்களைப் போலச் சாப்பிட்டு, உழைத்துக் களைத்து, அழுக்காகி, நோய்வாய்பட்டு வாழ வேண்டும்.”

இயேசு பிதாவை நோக்கி ”பிதாவே நான் இவர்களை நேசிக்கிறேன், இவர்களுக்கு உதவ விரும்புகிறேன். நீர் என்னோடு இருக்கும் வரை அவர்களுக்காக எதையும் செய்ய நான் தயார்”

”அவர்கள் உன்னை ஏற்றுக்கொள்ளாமல் ஏளனம் செய்து புறக்கணிப்பார்கள். உன் சொந்தக் குடும்பத்தினரும் உன்னை நம்பாமல், பைத்தியக்காரன் என்று சொல்வார்கள். உன்னைப் பின்பற்றுகிறவர்களும் கூட உன்னை இறுதியில் கைவிட்டு ஓடிப்போவார்கள். நீ தனிமையடைவாய்.

”பிதாவே, நீர் என்னோடு இருக்கும் வரை அவர்களுக்காக எதையும் செய்ய நான் தயார்”

”அவர்கள் உன்னைப் பொய்யாய்க் குற்றஞ்சாட்டி, உன்னை அடித்து, காரியுமிழ்ந்து, வாரினால் அடிப்பார்கள். அவர்கள் உனது இரத்தம் வடியும் நிர்வாண சரிரத்தை சிலுவையிலே ஆணிகளால் அறைவார்கள். நீ இறந்து போவாய்.”

”பிதாவே, நீர் என்னோடு இருக்கும் வரை அவர்களுக்காக எதையும் செய்ய நான் தயார்”

”நீ சிலுவையிலே தொங்கும் வேளையில் உலகத்தின் பாவங்களை நீ உன் சரிரத்தில் சுமப்பாய். நீ உன் குற்ற உணர்ச்சியை உணர்ந்து, வேதனையும், அவமானமும் அடைவாய். அவர்களுடைய பாவம் உன்னையும் என்னையும் பிரிக்கும். உனக்கு மிகவும் தேவையுள்ள அந்நத் தருவாயில் நான் உன்னுடனே இருக்க இயலாது.”

இயேசு சென்னார் ”பிதாவே எனக்கு இப்போது எல்லாம் புரிகிறது. நான் போக விரும்புகிறேன்”

உங்களுக்கு இயேசுவின் அன்பு புரிகிறதா? (இயேசுவின் பாடுகள் குறித்த மருத்துவ அறிக்கையை படிக்கவும்.)

9. 1 பேதுரு 2: 21-25
   - வ 21 ன் படி இயேசு ஏன் இவ்வளவு பாடுகளைப் பட்டார்? (நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காண்பிக்கவே) அவர் இறுதிவரை பாவம் செய்யாதவராகவே இருந்தார்.

- இயேசு உங்களுக்காக மரித்தார் என்பதை உணர்கிறீர்களா? உலகில் நீங்கள் ஒருவர்தாம் பாவியென்றாலும் உங்களுக்காக மரித்திருப்பார் என உணர்கிறீர்களா?
- நீங்கள் ஒரு கிறிஸ்துவராக இருக்க, பாடுகள்பட தயாராய் இருக்கிறீர்களா? எதிர்ப்புகளை எதிர்கொள்ள தயாரா?
- வ 24 இல் ஏன் இயேசு நம் பாவங்களைச் சுமந்தார்? (நாம் பாவத்துக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படி)

10. 2 கொரிந்தியர் 5:14-15
    - முழு மனத்துடன் பவுல் இயேசுவைப் பின்பற்ற எது ஊக்குவித்தது? (அன்பு)
    - நம்மை தேவனுக்கு இவ்வளவு அர்பணித்தவர்களாக எது மாற்றுகிறது தெரியுமா? - பகிர்ந்து கொள்ளவும்.
    - வ 15இன் படி இயேசு ஏன் மரித்தார்? (நாம் நமக்காக வாழாமல் அவருக்காக வாழ்வதற்காக)
    - யாருக்காக பலர் வாழ்கிறார்கள்? (தங்களுக்காகவே) இதுவரையிலும் நீங்கள் யாருக்காக வாழ்ந்தீர்கள்? (எனக்காக)
    - நீங்கள் அக்கரையாக இருக்க வேண்டிதன் அவசியத்தை உணர்கிறீர்களா? இயேசுவின் மரணத்தை அறிந்த பின்பு எப்படி உணருகிறீர்கள்?

சவால்:

உங்கள் வாழ்க்கையை மாற்றுவதைக் குறித்து தீவிரமாயிருங்கள். இயேசு வாழ்ந்து தம்மைத் தாமே தியாகம் செய்ததைப் போல அன்பினால் ஒரு வாழ்க்கையை வாழ்ந்து காட்டுங்கள். (எபேசியர் 5: 1-2) இனி சாக்குப்போக்கு ஏதும் சொல்லாதீர்கள்.

மற்ற உபயோகமான வசனங்கள்:
எபேசியர் 5:1-2, ஏசாயா 53

# சிலுவையில் அறைதலின் மருத்துவ அறிக்கை

தூக்கிலிடுதல், மின்சார நாற்காலியில் அமர்த்துதல், விஷவாயுக் கூடம் போன்ற தண்டனைகளை மக்கள் அஞ்சுவார்கள். இப்படிப் பட்ட செய்திகளைக் கேள்விப்படும்போது நாம் அந்த வேதனையையும் பயங்கரத்தையும் எண்ணி நடுங்குகிறோம். ஆனால் இவையெல்லாம், கிறிஸ்து அனுபவித்த வேதனைகளை ஒப்பிடும் போது அவ்வளவு கடினமானவைகளாய் தோன்றாது.

இக்காலத்தில் யாரையும் சிலுவையில் அறைவது இல்லை. நமக்கு சிலுவை வெறும் நகைகளிலும், அலங்காரப் பொருட்களிலும் மட்டுமே காட்சிதருவதாக இருக்கிறது. சிலுவை மரணம் என்பது மெல்ல மெல்ல மரணத்தைத் தரக்கூடியதாகவும் மிகுந்த வேதனையைத் தரும் விதமாக இருக்கும் படி உரேமை ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கொடூர கலை. மற்ற குற்றவாளிகளுக்குப் பாடமாக அமைய உருவாக்கப்பட்ட அனைவரும் காணும் விதமாக நிறைவேற்றப்படும் தண்டனை. இது அனைவராலும் அஞ்சப்படும் மரணம்.

இரத்தத் துளிகளைப் போன்ற வியர்வை: (லூக்கா 22:44) அவர் மிகவும் வியாகுலப் பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. அவரது வியர்வைத்துளிகள் வழக்கத்தைவிட அதிகத் தீவிரமாய் இருந்தன, ஏனெனில் அவர் வழக்கத்தை விட அதிக உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருந்தார். நீரிழப்பும், சோர்வும் அவரை மேலும் பலவீனமாக்கின.

அடிகள்: இந்த நிலையிலே இயேசு முதல் உடற்பூர்வமான துன்பத்தை அனுபவித்தார். அவர் கண்கள் கட்டிய நிலையில் முகத்தில் அடிகளும் குத்துக்களும் விழுந்தன. அடி விழும் இடத்தை அறியாததனால் அவர் அதை எதிர்கொள்ள இயலாமல், அவரது முகம், உதடுகள், கண்கள் ஆகியவை காயப்பட்டிருக்கலாம். அவர் அனுபவித்த அநீதியான விசாரணையின் மனோரிதியான பாதிப்பின் தன்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. நீரிழந்தவராகவும், சோர்வடைந்தவராகவும், அதிர்ச்சியடைந்தவராகவும் அவர் இருந்தார்.

வாரினால் அடித்தல்: முந்தைய 12 மணி நேரத்தில் நண்பர்களால் கைவிடப்படல், கொடூரமான அடிகள், தூக்கமற்ற இரவு, அநீதியான விசாரணைகளுக்கிடையே பல மைல் தூரம் நடத்தல் போன்றவற்றால் இயேசு உணர்ச்சிக் கொந்தளிப்பை அனுபவத்தார். எவ்வளவு கட்டுருதியான உடலிருந்தாலும் பாலஸ்தீனத்தின் பயணங்களில் சோர்வடைந்த அவர் நிச்சயமாக ஒரு கொடூரமான தண்டனையான

வாரினால் அடிக்கும் தண்டனைக்குத் தயாரக இருக்க முடியாது. அதன் விளைவுகள் மோசமானதாக இருக்கும்.

வாரினால் அடிக்கப்படும் மனிதனின் ஆடைகள் களையப்பட்டு கழுமரக் கம்பத்தில் கைகள் தலைக்கு மேலாகக் கட்டப்பட்டிருக்கும். பின்பு வாரினால் அவனது முதுகு தோள் புட்டம் தொடைகள் மற்றும் கால்களில் அடிப்பார்கள். போர்ச்சேவகன் அடிபடுவரின் பின்னால் ஒருபுறம் நின்றவாறு அடிப்பான். தோல் வார்கள் பின்னிப்பிணைக்கப்பட்ட சவுக்கின் நுனியில் சிறு ஈய குண்டுகளோ, இரும்புக் குண்டுகளோ பிணைக்கப்பட்டிருக்கும். இந்தத் தோல் வார் சவுக்கு குற்றவாளியை மரணத்தின் விளிம்புக்குக் கொண்டுவரத் திட்டமிட்டு உருவாக்கப் பட்டதாகும். சில வேளைகளில் ஆட்டின் எலும்புகளும் அதோடு இணைக்கப் பட்டிருக்கும்.

அடிக்கப்படும் போது வார் மேலோட்டமான வெட்டுக் காயங்களை முதலில் ஏற்படுத்தும். பின்பு ஆழமான உட்காயங்களை தசையின் திசுக்களில் ஏற்படுத்தும். சிறு நரம்புகளும், நாளங்களும் வெட்டப்படுவதனால் உண்டாகும் இரத்தப்போக்கு தசைகளின் கீழேயுள்ள முக்கிய இரத்த நாளங்கள் வெட்டப்படுவதனால் அதிகமாகும். அந்த உலோக உருண்டைகள் முதலில் அகலமான ஆழமான காயங்களை ஏற்படுத்தும். பின்பு தசை கிழிந்துபோக அதுவே காரணம் ஆகும். ஆட்டு எலும்புகள் அடித்துத் திரும்ப இழுக்கப்படும் போது தசைகளை வெட்டிக் கிழிக்கும். அடித்து முடிக்கும் போது முதுகுப்பகுதியின் மொத்த தோலும் கிழிந்து இரணமாகவும் முழுதும் இரத்தப்போக்கு கொண்டதாகவும் மாறிப்போயிருக்கும்.

வேதாகம எழுத்தாளர்கள் உபயோகிக்கும் வார்த்தைகளைப் பார்க்கும் போது இயேசுவுக்கு தரப்பட்ட தண்டனை கடுமையானதாகவே இருந்திருக்க வேண்டும். அவரை அந்தக் கழுமரத்திலிருந்து கழற்றிவிட்ட போது நிற்கத் திராணியில்லாமல் அவர் நிலைகுழைந்து போயிருக்க வேண்டும்.

ஏளனம்: அந்த கொடுமையான வாரில் அடிக்கப்பட்ட நிகழச்சிக்குப்பின் அவருக்கு ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும் நேரம் தரப்படாமல் அடுத்த கொடுமையைக் கட்டவிழ்த்து விட்டார்கள். நிற்கவே இயலாத அவரின் மேல் கனமான மேலங்கியைப் போர்த்திக் கட்டினர். அவரது தலையில் முட்களைக் கொண்டு வளைத்துச் செய்யப்பட்ட கிரிடத்தைச் சூடி தலையில் அறைந்தார்கள். அதற்கும் மேலாக ஒரு தடியைக் கொடுத்து செங்கோல் எனக் கேலி செய்தனர். முட்கிரிடத்தின் முட்கள் அவரது தலைக் கபாலத்தில் பாய்ந்து மேலும் இரத்தப்போக்கை ஏற்படுத்தியது. அவர்கள் முரட்டுத்தனமாக அவரது மேலங்கியை உரித்தபோதோ

முதுகின் எல்லாக் காயங்களிலும் மீண்டும் இரத்தம் கசிய ஆரம்பித்தன. மேலும் சரிரத்திலும் உணர்ச்சிப் பூர்வமாகவும் பலவீனப்படுத்தப் பட்ட இயேசு கொலை செய்யப்படும்படி கொண்டு செல்லப்பட்டார்.

சிலுவையிலறைதல்: சிலுவையிலறைய உரோமையர் உபயோகப் படுத்திய மரமானது ஒருவர் சுமந்து செல்ல இயலாத அளவுக்கு கனமானது. ஆனபோதும் சிலுவையில் அறையப்படும் குற்றவாளியே அந்தச் சிலுவை மரத்தைச் சுமந்து செல்ல பணிக்கப் பட்டான். அதை நகரத்தின் வெளியே உள்ள கொலைக்களம் வரை சுமந்து செல்ல வேண்டும். (அந்த மரம் 50 முதல் 80 கிலோ வரை எடையுள்ளதாக இருக்கலாம் (75 முதல் 125 பவுண்டு)) அவர் சுமை தாளாமல் கீழே விழுந்த போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் அதை சுமக்கும் படி கட்டாயப்படுத்தப்பட்டார்.

இயேசு தமக்குக் கொடுக்கப்பட்ட திராட்சை இரசத்தையும் வெள்ளைப்போள பானத்தையும் குடிக்க மறுத்துவிட்டார். (அது வேதனையின் அளவைக் குறைக்க கொடுக்கப் படும்) சிலுவை மரத்தின் மீது தள்ளிவிடப் பட்டு, அவரது கரங்களில் (மணிக்கட்டில்) ஆணிகள் அறையப்பட்டன. இந்த ஆணிகள், ஏறக்குறைய 6 அங்குல நீளமும் அதற்கேற்ற பருமனும் கொண்டதாக இருக்கும். இந்த ஆணி கையிலுள்ள மிக முக்கிய நரம்புகளைச் சேதப்படுத்தி சொல்லவொன்னா வேதனையைக் கொடுக்கும். எலும்புகளுக்கும் தசைகளுக்கும் இடையே கவனமாகச் செலுத்தப்படும் இந்த ஆணி சிலுவையில் தொங்கும் போது உடல் எடையைத் தாங்கும் விதமாக அறையப்படும்.

கால்களில் ஆணியறையப்படுவதற்காக இயேசுவின் சரிரம் சிலுவை மரத்திலேற்றப்பட்டு நிலையான மரத்தில் இணைக்கப்படும். பின்பு முழங்கால் மடிக்கப்பட்ட நிலையில் இருபாதங்களையும் ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து ஒரே ஆணியினால் அறைவார்கள். இதுவும் மிகவும் கொடிய வேதனையை ஏற்படுத்தும். ஆயினும் கரங்களிலும் கால்களிலும் ஆணிகள் அறையப்படும் போது முக்கிய இரத்த நாளங்கள் பாதிக்கப்படாமல் அறைவார்கள். இதன் மூலமாக மரணம் அதிக வேதனையாகவும் மிகவும் நீண்டதாகவும் இருக்கும்.

சிலுவையிலறையப்பட்ட பின்பு குருசேற்றத்தின் பயங்கரம் ஆரம்பிக்கும். சிலுவையிலறையப்பட்டவரது கைகள் தலைக்கு மேலாக இருந்து உடல் தொங்கும் படியாக செய்யப்பட்டதினால் சரிரத்தின் முழு எடையையும் கைகளில் உள்ள ஆணியே தாங்கும் ஆகவே கைமணிக்கட்டுகளில் கடும் வேதனை ஏற்படும். அதுமட்டுமின்றி இந்த நிலையில் தொங்கும் போது மூச்சுவிட முடியாத சிரமம் ஏற்படும். மூச்சு விட்டு மீண்டும் புதுக் காற்றை உள்ளிழுக்க வேண்டுமானால் ஆணியிலறையப்பட்ட தமது

கால்களினால் தம் சரிரத்தை மேல் நோக்கி உந்தித் தள்ளித்தான் மூச்சுவிட முடியும். வலியைத் தாங்க இயலாமல் அவர் தமது கால்களின் பலத்தை இழக்கும் போது, மீண்டும் தம் கை ஆணிகளில் தொங்க நேரும். இவ்வாறு மாறி மாறி அவர் மூச்சுவிட கைகளிலும் கால்களிலும் சுமையை மாற்ற அவர் வெகுவாய் சோர்வடைவார். இந்த கொடூர வேதனையை சிலுவைமரத்தில் உராயும் அவரது முதுகுப் புண்கள் அதிகரிக்கச் செய்யும். இதனால் சரிரம் முழுதும் தசைப்பிடிப்பு ஏற்பட்டு மேலும் வலியதிகரக்கும். இவ்விதமாய் இயேசு பல மணிநேரங்கள் போராடிய பின்பு இறுதியாக அதிக சத்தமிட்டு உயிர் நீத்தார்.

மரணத்தின் காரணம்: இயேசுவின் மரணத்திற்கு பல காரணங்கள் இருந்தன. அதிர்ச்சியும் மூச்சுத்திணரலும் பொதுவாக சிலுவை மரணத்திற்குக் காரணங்கள் ஆனால் இயேசுவுக்கோ, கடும் இருதய செயலிழப்பினாலேயே மரணம் சம்பவித்தது. அவரது இறுதி மரண ஓலத்தைத் தொடர்ந்து உடனடியாக மரணம் சம்பவித்ததால் இப்படிக் கருதப்படுகிறது. அவரது மரணம் வெகு சீக்கிரத்திலேயே நிகழ்ந்தது. (பிலாத்துவும் கூட அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் எனக் கேள்விப்பட்டு ஆச்சரியப்பட்டான்) ஒரு கடும் மாரடைப்பு மற்றும் இதயக்குழாய் வெடிப்பு அவரது உடனடி மரணத்துக்குக் காரணமாய் இருக்கக்கூடும்.

ஈட்டியினால் குத்தப்பட்ட காயம்: இயேசுவோ ஏற்கனவே மரித்துவிட்டார். அவரது அருகிலிருந்த குற்றவாளிகளின் கால்கள் முறிக்கப்பட்டு அவர்கள் சீக்கிரம் மரிக்கும் படி செய்யப்பட்டது. இயேசுவின் விலாவில் போர்ச்சேவகன் ஈட்டியால் குத்தினான் என வாசிக்கிறோம். மரணத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் போர்ச்சேவகன் குத்திய ஈட்டி அவரது இருதயத்தைக் குறிவைத்துக் குத்தப்பட்டது. அக்காயத்திலிருந்து இரத்தமும் தண்ணீரும் வழிந்தது. இருதயத்தைச் சுற்றியுள்ள சவ்வு (பெரிக்கார்டியம்) கிழிக்கப்பட்டதால், அவர் மரித்தபோது ஏற்பட்ட இருதய அழுத்தம் ஏற்படக் காரணமான நீர்ச்சேர்க்கையும், இருதயத்திலிருந்து இரத்தமும் புறப்பட்டு வந்தன.

முடிவு: சுவிஷேசங்களிலிருந்தும் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்தும் நிச்சயமாக அறியப்படும் உண்மை என்ன வெனில் இயேசு சிலுவையில் மரித்தார் என்பதுதான். தற்கால மருத்துவ அறிஞர்களும் இதை ஒப்புக் கொள்கின்றனர்.

# 8. மனந்திரும்புதல்

உபயோகப்படுத்தப்பட்ட வசனங்கள்:

1. லூக்கா 13:5
2. அப்போஸ்தலர் 26:20
3. மத்தேயு 5:28-30
4. 2 கொரிந்தியர் 7:10
5. எபேசியர் 4:22-32
6. அப்போஸ்தலர் 2:38
7. சங்கீதம் 51:1-17

நோக்கம்: கிருபையில் நம்பிக்கை வைத்த பின்பு மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற்றுக் கொள்வதுதான் வேதாகமம் எதிர்பார்க்கும் பதிலாகும். (அப்போஸ்தலர் 2:36-38) மனந்திரும்புதல் என்ற கிரேக்க வார்த்தையின் பொருள் ”மெட்டெனோய்யா” - ஒருவர் தனது மனத்தையோ அல்லது நோக்கத்தையோ மாற்றிக் கொள்ளுதல் என்பதாகும்.

நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் பாவங்களை அறிக்கையிட்ட பின் எப்படி உணருகிறீர்கள்? மேலும் ஏதேனும் அறிக்கையிட விரும்புகிறீர்களா?


இன்று மனந்திரும்புதல் பாடம் கற்றுக் கொள்வோம். மனந்திரும்புதல் என்றால் என்ன தெரியுமா? (மனதையும் நோக்கத்தையும் மாற்றிக் கொள்ளுதல்) இதைத்தான் நீங்களும் செய்ய வேண்டும். பாவங்களை அறிக்கையிட்டால் போதாது. அவற்றிலிருந்து மனம் மாற வேண்டும். மனந்திரும்புதல் வெறும் உணர்ச்சியென பலர் நினைக்கிறார்கள். ஆனால் வேதாகமத்தின் படி இது வெறும் உணர்ச்சியல்ல. அதைப்பற்றி இன்று கற்றுக்கொள்வோம்.

1. லூக்கா 13:5 தேவன் நமக்கு இரண்டே வாய்ப்புகளைத்தான் தருகிறார் :
    - மனந்திரும்புதல்
    - அழிந்து போதல்

2. அப்போஸ்தலர் 26:20
    - பவுல் சென்றவிடமெல்லாம் மனந்திரும்புதலைப் பிரசங்கித்தார்.

- மெய்யான மனந்திரும்புதல் என்பது பாவத்தை விட்டுவிடுதல் மட்டுமின்றி தேவனிடத்திற்குத் திரும்புதல் ஆகும்.
- தேவனும் மற்றவர்களும் தெரிந்துகொள்ளும் விதமாக நமது மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகள் இருக்க வேண்டும்.

மனந்திரும்புதல் வரைபடம்:



3. மத்தேயு 5:28-30
    - பாவத்தைப் பாவமாகக் கருதவேண்டும். பாவங்களில் பெரிய பாவம் சிறிய பாவம் என்பதில்லை. இச்சைப்பார்வையும் கூட விபச்சாரம்தான்.
    - நாம் பாவங்களை வெட்டியெறிய வேண்டும். நீங்கள் பாவத்தை வெறுத்தால்தான் அவற்றை விட்டு விலக முடியும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இன்னும் வெறுக்காத பாவங்கள் உண்டா?
    - எச்சரிக்கை: நீங்கள் ஏதேனும் பாவங்களை விரும்புகிறவராயிருந்தால் நீங்கள் தற்காலிகமாக அவற்றை விட்டுவிடுவீர்கள் ஆனாலும் மீண்டும் அவற்றை தேடிப்போவீர்கள்

4. 2 கொரிந்தியர் 7:10 பொதுவாக நாம் பாவங்களைக் குறித்து மனதுக்கப் படுகிறோம். வேதாகமத்தின் படி இருவிதமான துக்கங்கள் உள்ளன.
    - தேவனுக்கேற்ற துக்கம் - உங்கள் பாவங்களுக்குறித்து மெய்யாக மனம் வருந்தி மீண்டும் எக்காரணத்தை முன்னிட்டும் இந்தப்பாவங்களை செய்யாதிருக்க தீர்மானித்தல். இது இரட்சிப்புக்கு வழிவகுக்கும்.
    - உலகப்பூர்வமான துக்கம் - உங்கள் பாவங்களுக்காக மனவருத்தப் படுவீர்கள். ஆனாலும் மாற மாட்டீர்கள். நீங்கள் மீண்டும் மீண்டும் அதே பாவத்தைச் செய்வீர்கள். இது மரணத்திற்கு(நரகம்) வழிவகுக்கும்.
    - பயணச்சீட்டு வாங்காத பயணம் பற்றிய உவமை

5. எபேசியர் 4:22-32 வேதாகமம் நமது பழைய மனிதனை அவனது விருப்பங்களோடும் பழக்க வழக்கங்களோடும் விட்டு விட வேண்டும் என போதிக்கிறது. நமது பழைய பாவங்களையும் பழக்கங்களையும் நிறுத்துவது மட்டுமின்றி நாம் புதிய மனிதனை அணிந்து கொள்ள வேண்டும். நம் பழைய தன்மையை புதிய ஆத்மீகத் தன்மையைக் கொண்டு நிரப்ப வேண்டும். பழைய பழக்கங்களை புதிய பழக்கங்களாலும் மனப்பான்மைகளாலும் நிரப்ப வேண்டும். பொல்லாத சிந்தனைகளை நீதியான சிந்தனைகளால் நிரப்ப வேண்டும். வ:25 - பொய்மையை நீக்கி உண்மை பேசுவதனால் அதை நிரப்ப வேண்டும். வ: 28 - திருடுதலை நீக்கி - ஒரு வேலையைக் கண்டுபிடித்து, உழைத்து சம்பாதித்து தேவையுள்ள மற்றவருக்கும் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். வ 29 - பக்தி விருத்திக்கு ஏதுவானதாக இல்லாத பேச்சுக்களை மாற்றி ஒருவரை ஒருவர் ஆத்மீகமாக கட்டியெழுப்ப தகுதியானவற்றையே பேச வேண்டும். வ 31-32 கசப்புணர்ச்சியையும், கோபம், ஆத்திரமடைதலையும், வன்மம் பாராட்டுவதையும் புறம்பேசுவதையும் விட்டுவிட்டு கிருபையும் இரக்கமும் மன்னித்தலும் நிறைய வேண்டும். மனந்திரும்பிய பின் நாம் என்ன செய்ய வேண்டும்?
6. அப்போஸ்தலர் 2:38 முதலாவது மனந்திரும்பி பின்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். நீங்கள் இதற்குத் தயாரா?
7. சங்கீதம் 51:1-17 இந்த சங்கீதத்தை ஒரு ஜெபமாகப் படிக்கவும் இதன் மூலம் தேவனிடத்திற்கு நொறுங்கின மனப்பான்மையும் வரும்படி உற்சாகப்படுத்துங்கள். நாம் ஜெபிப்போம்.

மனந்திரும்புதல் குறித்த உபரி பாடக்குறிப்புகள்

லூக்கா 13:5 தேவன் நமக்கு இரண்டே வாய்ப்புகள்தாம் கொடுத்துள்ளார்

- மனந்திரும்புதல்

- கெட்டு அழிதல்
  பரலோகம் அல்லது நரகத்தைப் போல. தேவனுக்கு இவைதவிற வேறே இடைப்பட்ட இடங்கள் கிடையாது. நீங்கள் மனந்திரும்ப வில்லையெனில் கெட்டழிவீர்கள். நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

எவையெல்லாம் மனந்திரும்பதல் அல்ல:

1. வெறும் குற்ற உணர்ச்சி அப்போஸ்தலர் 24:25

- பேலிக்ஸ் குற்ற உணர்ச்சியுற்றான் ஆனாலும் மனந்திரும்பவில்லை.
- நாமும் நமது பாவத்தைக் குறித்து வருத்தமான உணர்ச்சியடைகிறோம். வருத்தம் மனந்திரும்புதலுக்கு முன்பு ஏற்படுகிறது ஆயினும் அவ்வுணர்ச்சியே மனந்திரும்புதல் அல்ல.

2. பாவத்திற்காக மன்னிப்புக் கேட்பது மட்டுமே மனந்திரும்புதல் ஆகாது. 2 கொரி 7:10

- சிலர் தங்கள் பாவங்களுக்காக மனவருந்தி மன்னிப்புக் கேட்கின்றனர். ஏனெனில் பாவத்தின் விளைவுகளைக் கண்டோ அல்லது பாவத்தில் பிடிபட்டதினாலேயோ.
- தாம் செய்த பாவத்திற்காக மனம் வருந்துதலைவிட பாவம் செய்கையில் பிடிபட்டு அதற்கு கிடைக்கும் தண்டனைக்காகவே மனம் வருந்துகின்றனர்.

3. நல்லவராக வாழ முயற்சிப்பது ஏசாயா 64:6

- பலர் தங்கள் சொந்த முயற்சியில் தாமாகத் திருந்தி ஒரு மேம்பட்ட வாழ்க்கை வாழ முயற்சிக்கிறார்கள்.
- எந்த சொந்த முயற்சியும் அதில் தானே சுயநீதியையும் கொண்டதாக இருக்கும். அது தேவன் தம்மை மன்னிக்க வேண்டியதன் அவசியத்தை உணராததாகவே இருக்கும். அதனால் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டிய அவசியத்தை உணர்வதில்லை.

4. பக்தி மார்க்கத்தவராக மாறுவதில் இல்லை லூக்கா 18:9-14

- பரிசேயர்கள் நடவடிக்கைகளிலும் பழக்கவழக்கங்களிலும் மிகுந்த பக்தி மார்க்கத்தவராக இருந்தனர்.
- அவர்கள் உபவாசித்து ஜெபித்து பற்பல பக்திமார்க்க சடங்குகளைச் செய்தனர். காணிக்கையும் தசம பாகம் கொடுத்தனர். ஆயினும் மனந்திரும்பவில்லை.

எது மெய்யான மனந்திரும்புதல்?

1. உங்கள் பாவங்களுக்காக மெய்யாகவே மனம் வருந்தி தேவனிடத்திற்கு மனந்திரும்புதல் சங்கீதம் 51: 1-4, சங்கீதம் 38:8

   - உண்மையான மனந்திரும்புதல் தம்மைக் குறித்து வருத்தப்படுவதோ வேறொருவரிடம் வருத்தப்பட்டு மன்னிப்புக்கேட்பதோ அல்ல. முதலாவது தேவனிடத்தில் வருத்தத்தோடு சென்றடைவதேயாகும்.

2. உங்கள் பாவங்களைக் குறித்து உண்மையைப் பேசுதல். சங்கீதம் 32:5, 1யோவான்1:9, யாக்கோபு 5:16
3. உங்கள் பாவங்களை விட்டு விடுதல் நீதிமொழிகள் 28:13
4. பாவத்தை வெறுத்தல். மத்தேயு 5:29-30
5. சாத்தியமான போது மற்றவர்களுக்குப் பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துதல். லூக்கா 19:8

மனந்திரும்புதலில் நடப்பது என்ன?

1. பாவத்தை விட்டு விலகுதல் கலாத்தியர் 5:19-21, எபேசியர் 5:5, சக்காரியா1:4
2. உலகத்தின் போக்கை விட்டு விலகுதல் 1 யோவான் 2:15, யாக்கோபு 4:4
3. தம்மைத்தாமே நேசிப்பதிலிருந்து விலகுதல் 2 கொரி 5:15, லூக்கா 14:26
4. தேவனை நோக்கித் திரும்புதல் அப்போஸ்தலர் 20:21, அப்போஸ்தலர் 26:20, சக்காரியா 1:3
5. பழைய மனிதனைக் களைந்து புதிய மனிதனை அணிந்து கொள்ளுதல். எபேசியர் 4:22, கொலோசெயர் 3:5-14

முடிவு: அப்போஸ்தலர் 2:38 முதலாவது மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் அதற்குத் தயாரா?

குறிப்பிட்ட பாவங்களை விட்டு மனந்திரும்ப உதவும் வசனங்கள்.

பின் வரும் வசனங்கள் குறிப்பிட்ட ஓரிரு பாவங்களை விட்டு மனந்திரும்பச் சிரமப்படுபவர்களுக்காக தொகுக்கப்பட்டிருக்கிறது. இப்பாவங்கள் அவர்களையும், மற்றவர்களையும், தேவனையும் எப்படிக்காயப்படுத்துகிறது என கற்பிக்கிறது. மேலும் இந்தப்பாவங்கள் அவர்களது குணாதியத்தை எப்படி பாதிக்கிறது எனப்புரிந்து கொண்டு அவர்கள் மாறுவதற்கான சவாலைக் கொடுக்கிறது.

| எண் | மனந்திரும்ப வேண்டிய பாவம் | வேத வசனம் |
|---|---|---|
| 1 | மனந்திரும்ப மறுப்பவர்கள் | ரோமர் 2:4 |
| 2 | உலகத்தை நேசிப்பவர்கள் | யாக்கோபு 4:4 |
| 3 | பணத்தை நேசிப்பவர்கள் | லூக்கா 16:13-15, நீதிமொழிகள் 15:27 |
| 4 | மன்னிக்க இயலாமற் தடுமாறுபவர்கள் | மத்தேயு 6:14-15 |
| 5 | கருக்கலைப்பு | எரேமியா 1:5, சங்கீதம் 139:13-16 |
| 6 | பெண்களுடன் தொடர்பு - பலவீனமான மனப்பான்மை கொண்ட பெண்கள் | 2 தீமோத்தேயு 3:6-7, எபேசியர் 5: 15-17 |
| 7 | சோம்பலுள்ளவர்கள், வேலை செய்ய மனமில்லாதவர்கள் | 2 தெசலோனிக்கேயர் 3:10 |
| 8 | சிறு பிள்ளைகளை விபச்சார எண்ணத்துடன் இச்சிப்பவர்கள் | மாற்கு 9:36, 42, லூக்கா 17:1-2 |
| 9 | ஓரினச்சேர்க்கை - ஆண்புணர்ச்சி | 1 கொரிந்தியர் 6:9 |
| 10 | சுயநீதி - மற்றவர்களைத் தாழப்பார்த்தல் | லூக்கா 18:9-14 |
| 11 | பெருமை | பிலிப்பியர் 2:3, நீதிமொழிகள் 13:10 |
| 12 | ஆழமான சுயநலம் | 2 தீமோத்தேயு 3:1-5 |
| 13 | ஆழமான கசப்புணர்ச்சி | எபிரெயர் 12:15, கொலேசெயர் 3: 5-8 |
| 14 | திருமணப் பிரச்சனைகள் | கொலோசெயர் 3:18, எபேசியர் 5:22-31 |
| 15 | பொய் - ஏமாற்றுதல் | நீதிமொழிகள் 15:4 |
| 16 | ஆண் - பெண் சிநேகிதம் | எபேசியர் 5:3 |

# 9. ஞானஸ்நானம்

உபயோகப்படுத்தப்பட்ட வசனங்கள்


1. அப்போஸ்தலர் 2:36-41
2. யோவான் 3:3-5
3. மத்தேயு 28:18-20
4. ரோமர் 6:3-7
5. 1 பேதுரு 3:20-21
6. அப்போஸ்தலர் 8:26-39
7. அப்போஸ்தலர் 16:13-15
8. அப்போஸ்தலர் 22:1-16


நோக்கம்: சிலுவையைப்பற்றி போதித்த பின்பு பேதுரு மனந்திரும்பி பாவமன்னிப்புக்கு என்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளக் கோரி அனைவரையும் கேட்கிறார்.

1. அப்போஸ்தலர் 2:36-41 இயேசுவை ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரது சிலுவை மரணத்துக்கு தாம் தனிப்பட்ட பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். பேதுருவின் செய்தி அவர்களது இதயத்தைப் பாதித்ததால் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்டார்கள். பேதுரு அவர்களிடம், "நீங்கள் முதலாவது மனந்திரும்பி பின்பு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் அப்போது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வீர்கள்" என்றார்.
2. யோவான் 3:3-5 நீங்கள் பரலோகத்திற்குப் போக வேண்டும் என்றால் இயேசு சொற்படி என்ன நடக்க வேண்டும்? (நாம் மீண்டும் பிறக்க வேண்டும். நாம் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும்) நாம் எப்போது தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறப்போம்? (ஞானஸ்நானம் பெறும் போது)
3. மத்தேயு 28:18-20 யாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும்? (இயேசுவின் கட்டளைகளை போதிக்கப் படத்தக்க, புரிந்துகொள்ளக் கூடிய, கீழ்படியக் கூடிய வயது வந்தவர்களுக்கு வ:20) (குழந்தைகளுக்கும், பாலர்களுக்கும் அல்ல என்று பொருள்படும்) மேலும் ஞானஸ்நானமானது இயேசுவின் கட்டளையானதால் அவரது கட்டளைக்கு நாம் கீழ்படிய வேண்டும்.

4. ரோமர் 6:3-7 வ:3 இல் நாம் ஞானஸ்நானம் பெறும் போது இயேசுவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம். வ:4, அவரது அடக்கத்துக்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெறுகிறோம். நாம் புதிய வாழ்க்கையை வாழும்படி ஞானஸ்நானம் பெறுகிறோம். நாம் பழைய மனிதனை கிறிஸ்துவுடன் சிலுவையிலறைகிறோம். நமது பழைய மனிதன் மரிக்கும் போது நாம் எதிலிருந்து விடுதலையாகிறோம்? (பாவத்திலிருந்து)

ஞானஸ்நான வரைபடம்




இயேசு மரித்தார் அடக்கம் செய்யப்பட்டார் உயிர்த்தெழுந்தார்

ஞானஸ்நானத்தில் நாம் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் பங்கு கொள்கிறோம்.

நாம் மரிக்கிறோம் (மனந்திரும்புதல் மூலமாக) நாம் உயிர்த்தெழுகிறோம்

நாம் ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்படுகிறோம் ஞானஸ்நானம் என்பது விசுவாசத்தினால் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதாகும். நாம் கிறிஸ்துவின் அங்கமாக ஞானஸ்நானம் பெற வேண்டும்.

(எபேசியர் 1:7 இல் வாசிப்பதைப் போல இயேசுவின் இரத்தம் நம்மை இரட்சிக்கிறது. ரோமர் 6:3-4 விசுவாசத்தின் அடிப்படையில் இயேசுவின் இரத்தத்துடன் ஞானஸ்நானத்தின் மூலமாக நாம் தொடர்பு படுத்தப்படுகிறோம்.)

5. 1 பேதுரு 3:20-21

நோவாவின் நாட்களில் எத்தனை பேர் இரட்சிக்கப்பட்டார்கள்? (8) எட்டுப்பேர் மாத்திரம் நீரிலிருந்து இரட்சிக்கப்பட்டார்கள் - இதன் பொருளென்ன?

அந்த பெருவெள்ளமானது ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. பெருவெள்ளத்தின் தண்ணீர் உலகத்தின் பாவங்களிலிருந்து நோவாவின் குடும்பத்தை பிரித்தது. ஆதியாகமம் 6:5 இன்படி நீரானது உலகத்தின் பாவங்களுக்கும் நோவாவின் பேழையிலிருந்த எட்டுப்பேருக்கும் இடையே ஒரு பிரிவை உண்டாக்கிற்று. அதேபோல ஞானஸ்நானமும் நமக்கும் பாவத்துக்கும் இடையே ஒரு பிரிவை உண்டாக்குகிறது. ஆகவே பேதுரு பெருவெள்ளம் ஞானஸ்நானத்தைக் குறிக்கும் அடையாளமாக இருக்கிறது என்றார். ஆனால் ஞானஸ்நானம் ஒரு அடையளம் அல்ல.

வ:21இன்படி ஞானஸ்நானம் என்ன செய்கிறது. (நம்மை இரட்சிக்கிறது.) இப்போது வேதாகத்தில் ஞானஸ்நானம் பெற்ற சிலரைப்பற்றி வாசிக்கலாம்.

6. அப்போஸ்தலர் 8:26-35 எத்தியோப்பிய மந்திரி வீடுதிரும்பும் வழியில் என்ன செய்து கொண்டிருந்தார்? (வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருந்தார்) அவர் மனத்தாழ்மையுள்ளவரா? அல்லது பெருமை நிறைந்தவரா? (தாழ்மையாய் உதவி கேட்டார் வ:30-31) அவர் பக்தியுள்ள நல்ல மனிதர் ஆனால் அவர் இரட்சிக்கப்படவில்லை. அவர் மெய்யான கிறிஸ்தவராகவும் இல்லை. ஆகவே அவர்கள் அந்த இரதத்திலே அமர்ந்து வேதாகமத்தை கற்றார்கள். (நாம் செய்வதைப்போல) பிலிப்பு இயேசுக்கிறிஸ்து பற்றிய நற்செய்தியை அவருக்கு அறிவித்தார். இயேசுவைப் பற்றிய நற்செய்தி என்ன? (அவர் வந்து மக்களுக்கு உதவிசெய்து, நம் பாவங்களுக்காய் மரித்து

மீண்டும் உயிர்த்தெழுந்தார். அதன் மூலமாக நாம் இரட்சிப்படைகிறோம்)

அப்போஸ்தலர் 8:36-39
அவர்கள் தண்ணீரைக் கண்ட போது இருவரும் தண்ணீருக்குள் இரங்கினார்கள். பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் ஞானஸ்நானம் என்பது முழுக்க நீருக்குள் முங்கி பெற்றுக்கொள்வது. அப்படித்தான் கிரேக்க மொழியில் பொருள் தருகிறது. மந்திரி எத்தியோப்பாவுக்குச் செல்லும் வரை ஏன் காத்திருக்கவில்லை? (அவர் உடனடியாக மன்னிக்கப்பட விரும்பினார்.) மேலும் அப்போஸ்தலர் 2 இல் அதே அவசரத்தையும் அதன் பின்பு மகிழ்ச்சியையும் காண்கிறோம்.

7. அப்போஸ்தலர் 16:13-15 (பெண்களுக்கு) தேவன் அவளது இதயத்தை பவுலுடைய செய்திக்குத் திறக்கச் செய்தார். அந்தச் செய்திக்கு அவளது பதில் என்ன? (உடனடி ஞானஸ்நானம்) அவள் ஏன் காத்திருக்கவில்லை? (அவளுக்கு இரட்சிப்புத் தேவைப்பட்டது)

8. அப்போஸ்தலர் 22:1-16 (எல்லாருக்கும்)
கிறிஸ்தவராவதற்கு முன்னால் பவுல் எத்தகையவராக இருந்தார்? (சபையை வன்மையாகத் துன்பப்படுத்துபவராக இருந்தார்) அவருக்கு என்ன நடந்தது? (இயேசு தரிசனமானார்) இயேசுவுடன் பேசிய பிறகு அவர் விசுவாசித்தாரா? (ஆம்) இதுவரை அவர் இரட்சிக்கப்பட்டாரா? (இல்லை) அப்போஸ்தலர் 9:9-12 இன்படி பவுல் மூன்று நாட்கள் புசிக்காமலும் குடிக்காமலும் ஜெபித்துக் கொண்டிருந்தார். அதுவரையிலும் அவர் இரட்சிக்கப் பட்டிருந்தாரா? (இல்லை) எப்போது பவுல் இரட்சிக்கப்பட்டார்? (வ.16- அவர் ஞானஸ்நானம் பெற்ற போது) ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன? (வஇ16- பாவங்களைப் போக்குவது) அனானியா பவுல் காத்திருக்க வேண்டுமென விரும்பினாரா? (இல்லை) இங்கும் ஞானஸ்நானம் பெற பவுல் அவசரம் காண்பிப்பதைப் பார்க்கிறோம். அதைத் தொடர்ந்து மகிழ்ச்சியையும் பார்க்கிறோம். நீங்கள் எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் எப்போது ஞானஸ்நானம் பெற விரும்புகிறீர்கள்?

முடிவு:

நீங்கள் என்ன செய்யவேண்டுமென நினைக்கிறீர்கள்? எப்போது ஞானஸ்நானம் பெற விரும்புகிறீர்கள்? நீங்கள் ஏன் ஞானஸ்நானம் பெற விரும்புகிறீர்கள்? (பாவங்கள் மன்னிக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்று இரட்சிக்கப்பட)

# 10.இயேசுவே ஆண்டவர்

உபயோகப் படுத்தப் பட்டுள்ள வசனங்கள்:

1. அப்போஸ்தலர் 11: 25-26
2. மாற்கு 12:28-31
3. லூக்கா 9டு:23-26
4. லூக்கா 11:1-5
5. லூக்கா 14: 25-33
6. 1 யோவான் 2:3-6
7. யோவான் 8:31-32
8. யோவான் 13:34-35
9. மத்தேயு 7:21-23
10. மாற்கு 1:16-20
11. ரோமர் 10:9-13

நோக்கம்: இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொள்வதன் பொருளை போதிப்பதே இப்பாடத்தின் நோக்கமாகும். நாம் ஞானஸ்நானத்தின் போது இயேசுவை சொந்த இரட்சகரும் ஆண்டவருமாக ஏற்றுக்கொண்டு அறிக்கை இடுகிறோம். அதன் பொருளென்ன? அது எப்படி நம் வாழ்க்கையையும் நாம் தேர்ந்தெடுக்கும் முடிவுகளையும் கூட மாற்றி விடுகிறது. இந்தப்பாடம் இயேசுவைப் பின்பற்றுவதென்றால் என்ன பொருள் என போதிக்கிறது. இயேசுவைப் பின்பற்றுகிறவர் என்றால் அவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும். அவரது இதயம் எப்படியிருக்க வேண்டும்? எத்தகைய அர்பணிப்பு கொண்டவராக இருக்க வேண்டும். இயேசுவைப்பின்பற்றத் தீர்மாணித்தவருடைய வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும்.

கிறிஸ்தவப்பின்னனியைச் சேர்ந்தவர்களுக்கு: நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? எதைக் கொண்டு உங்களைக் கிறிஸ்தவரென்று கருதுகிறீர்கள். (அவரது பதிலை கேளுங்கள்) இன்று வேதவசனங்களிருந்து எப்படிக் கிறிஸ்தவராக வாழ்வது என கற்றுக்கொள்வோம். முதலாவது கிறிஸ்தவரென்ற வார்த்தை எப்போது உபயோகப்படுத்தப்பட்டது எனக்கற்றுக்கொள்வோம்.

1. அப்போஸ்தலர் 11:25-26

   சீஷர் என்ற வார்த்தையின் பொருள் என்ன? வேதவசனத்தின் படி கிறிஸ்தவர் என்ற வார்த்தைக்கும் சீஷர் என்ற வார்த்தைக்கும் என்ன வேறுபாடு? ஒரே பொருள் தான்.

   சீஷர் ஸ்ரீ கிறிஸ்தவர்.

எத்தனை முறை கிறிஸ்தவர் என்ற வார்த்தை வேதாகமத்தில் வருகிறது. (மூன்று முறை வருகிறது) (அப்போ 11:26, அப்போ 26:28, 1 பேதுரு 4:16)

சீஷர் என்ற வார்த்தை எத்தனை முறை வருகிறது. (250 முறைக்கு மேல் வருகிறது.) இயேசுவைப் பின்பற்றுவதைக் குறித்து மற்ற வசனங்கள் என்ன சொல்கின்றன எனக்காண்போம்.

2. மாற்கு 12:28-31

   தேவனை நேசிப்பதற்கும், நமது அயலாரை நேசிப்பதற்கும் இரண்டு முக்கிய கட்டளைகளை தேவன் கொடுத்துள்ளார். சீஷராக வாழ்வதற்கு தேவனை முழு இதயத்தோடு நேசிப்பதும் நம் அயாலாரை நேசிப்பதும் அவசியமானவைகள். இவ்விரண்டு கட்டளைகளையும் நாம் புரிந்து கொண்டால் சீஷரிடமிருந்து அவர் என்ன எதிர்பார்க்கிறார் எனப் புரிந்துகொள்ளலாம்.

3. லூக்கா 9:23-26
   1. இயேசு எதிர்பார்க்கும் இதயத்தைப் பற்றி முக்கியத்துவத்துடன் பேசுங்கள். அவர் எதிர்பார்ப்பது என்ன எனப்பார்ப்போம்.
   2. தன்னைத்தான் வெறுப்பது.
   3. நாள்தேறும் தன் சிலுவையைச் சுமப்பது
   4. கிறிஸ்துவுக்காக தம் உயிரையும் இழக்கத் துணிவது
   5. இயேசுவைக்குறித்தும் அவரது வார்த்தைகளைக் குறித்தும் வெட்கப்படாதிருப்பது.
   6. சீஷத்துவத்தின் இந்த எதிர்பார்ப்புகளைக்குறித்து உங்கள் கருத்து என்ன?
   7. தம்மைத்தாமே வெறுப்பதென்றால் என்ன? எப்படி நாள்தேறும் நமது சிலுவையைச் சுமப்பது?
   8. இயேசுவைப் பின்பற்றுவதில் உங்களுக்குள்ள தடைகளாக எவற்றைக் கருதுகிறீர்கள்?
   9. இயேசுவையும் அவரது வார்த்தைகளையும் குறித்து வெட்கப்படுவதென்றால் என்ன பொருள்?

4. லூக்கா 11:1-5
   1. இயேசு தம் சீஷர்களுக்கு எப்படி ஜெபிப்பதெனக் கற்பித்தார். தேவனை பிதா என்று அழைக்க கற்பித்தார்.

2. சீஷராயிருப்பதன் பொருள் தேவனைப் பிதாவாகக் கருதும் ஆழந்த உறவு கொண்டிருந்தல். ஜெபத்தின் மூலம் நாம் தேவனிடமும், வேதாகமத்தின் மூலம் தேவன் நம்மோடும் பேசுகின்ற உறவை அடைகிறோம்.

5. லூக்கா 14: 25-33
    1. தம் சொந்த வாழ்க்கையைவிடவும், குடும்பத்தை விடவும், இயேசுவை அதிகம் நேசிக்க வேண்டும். (அதாவது பெற்றோரை மதிப்பதோ, அவர்களுக்கு சேவை செய்வதோ தவறென்று பொருளல்ல)
    2. தம் சிலுவையை சுமந்து கொண்டு இயேசுவைப் பின்பற்ற வேண்டும்.
    3. இயேசுவைப் பின்பற்றும் முன்னர் செல்லும் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும். இயேசுவைப் பின்பற்றுவது தீவிரமான வாழ்நாள் முழுமைக்குமான ஒரு முடிவாக இருக்க வேண்டும். தற்காலிகமானதாகவோ அல்லது வெறும் உணர்ச்சிப் பூர்வமானதாகவோ இருக்கக் கூடாது.
    4. இயேசுவுக்காக எல்லவற்றையும் இழக்கக் கூடாது.

6. 1 யோவான் 2: 3-6
    1. நாம் கிறிஸ்தவர்களா என்று நாம் தெரிந்து கொள்ள இந்த வசனம் உதவுகிறது.
    2. இயேசுவை அறிந்து கொண்ட எவரும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.
    3. இயேசுவைப் பின்பற்றுகிற ஒருவர் இயேசுவின் பாதையில் நடக்க வேண்டும்.

7. யோவான் 8: 31-32
    1. சீஷராக (கிறிஸ்தவராக) வாழ்வதற்கு வெறும் நம்பிக்கை மட்டும் போதாது.
    2. கீழ்ப்படிதல் (உபதேசத்தைக் கைக்கொள்ளுதல்) - ஒரு சீஷருக்கு கட்டாயமானதாகும்.

8. யோவான் 13: 34-35
    1. இந்தப் புதிய கட்டளையை நமக்குக் கொடுப்பதன் மூலமாக அவரது அன்பின் உதாரணத்தை நாம் கடைப்பிடிக்க இயேசு போதிக்கிறார்.
    2. இயேசுவின் சீஷராயிருப்பதன் அடையளம் அன்பாயிருத்தல்
        - ஆத்மீகமாகத் தொலைந்து போனவர்களைக் தேடிக்கண்டுபிடித்து இரட்சிப்பதுவும் மனுஷரைப் பிடிப்பவர்களாக இருப்பதும் அன்பான செயல்.

மாபெரும் கட்டளையை கீழ்ப்படிதல் (மத்தேயு 28:18-20, லூக்கா 19:10, மாற்கு 1: 16-20)

- ஏழைகளை நேசிப்பது. (மத்தேயு 25: 32-46)
- குடும்பத்தை நேசிப்பது (1 தீமோ 5:8)
- சபையை நேசிப்பது ( 1 பேதுரு 1: 22, கலாத்தியர் 6:10)
- நம் *எதிரிகளையும்* நேசிப்பது (மத்தேயு 5:44)

9. மத்தேயு 7: 21-23
   1. இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொள்வதென்றால் வெறும் வார்த்தைகளில் மட்டும் ஏற்றுக் கொள்வதன்று.
   2. கர்த்தாவே கர்த்தாவே என்று பக்தி மார்க்கத்தவரைப்போல சொல்லுவதும், தீர்க்கதரிசனம் சொல்லுவதும், அற்புதங்கள் செய்வதும் கூடப் போதாது.
   3. நாம் பிதாவின் சித்தப்படி செய்வதுதான் இரட்சிப்புக்கு வழி.
   4. பிதாவின் சித்தப்படி செய்பவர்தான் பரலோகத்திற்குச் செல்ல முடியும்.
10. மாற்கு 1: 16-20
    - இந்த வசனம் இயேசு தமது முதல் சீஷர்களை அழைத்ததைப் பற்றியும் அதற்கு அவர்களது உடனடி செயல்பாட்டையும் பற்றிக் கூறுகிறது.
    - சீமோனும் அந்திரேயாவும் என்ன செய்தார்கள்? யோவானும் யாக்கோபும் என்ன செய்தார்கள்?
    - இயேசுவின் அழைப்புக்கு உங்கள் பதில் என்னவாக இருக்கப் போகிறது?
    - மனிதரைப் பிடித்தல் என்றால் என்ன?
11. ரோமர் 10: 9-13
    - இயேசுவே ஆண்டவர் என்று ஞானஸ்நானத்தின் போது நாம் அறிக்கையிடுவோம். அதன் பொருள் என்ன?
    - இந்த அறிக்கை இயேசுவின் மீதுள்ள நமது மொத்த அற்பணிப்பு மற்றும் பக்தியைக் காண்பிக்கிறது.
    - இதன் மூலம் நான் செந்த எண்ணங்களை விட கிறிஸ்துவின் சித்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தீர்மானித்ததைக் காண்பிக்கிறது.
    - எவ்வளவு கடினமாயினும் இயேசுவுக்கு நான் கீழ்ப்படியப் போகிறேன் என்பதைக் காண்பிக்கிறது.

- வெறும் வாய்வார்த்தையில் விசுவாசிப்பதாகச் சொன்னால் போதாது. நாம் முழு மனதுடன் நம்ப வேண்டும்.

2 தீமோத்தேயு 2: 19-21 இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிடுவதன் நோக்கம் என்னவென்றால், நாம் பொல்லாப்பை விட்டு விலகி நன்மை செய்ய வேண்டும்.

முடிவு: இயேசுவின் சீஷராக இருப்பதன் அடிப்படை என்னவெனில் நீங்கள் இயேசுவை உங்களது சொந்த அன்பு செய்யும், கீழ்ப்படியும், ஆத்ம உறவு கொள்ளும் இரட்சகராக ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். மற்றெல்லாவற்றையும் விட இயேசுவை முக்கியமானவராக கருதி ஏற்றுக்கொள்ளுதல் ஆகும்.

# 11.சபை

உபயோகப் படுத்தப் பட்டுள்ள வசனங்கள்:

1. கொலொசெயர் 1: 18
2. 1 கொரிந்தியர் 12: 12-26
3. 1 தீமோத்தேயு 3: 15
4. எபேசியர் 2:19-22
5. எபேசியர் 4: 11-16
6. எபிரேயர் 13:17
7. எபிரேயர் 3: 12-13
8. எபிரேயர் 10: 24-25
9. அப்போஸ்தலர் 2:42
10. கொலேசெயர் 3: 12-17
11. மத்தேயு 18: 15-17

தேவைப்பட்டால் பயன்படுத்தக் கொள்ள வேண்டிய வசனங்கள்.

நோக்கம்: இப்பாடத்தின் மூலம் ஞானஸ்நானத்திற்குப் பின் படிப்பவர் தனித்து விடப்படாமல் இயேசுவின் சரிரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருப்பதை உணர்த்துதல். (1 கொரிந்தியர் 12:12-13) ஒத்த மனதுள்ள சீடர்களுடன் சேர்ந்து கிறிஸ்துவுக்குள்ளாக நாம் அவரை ஆராதிப்பதே நோக்கம். இந்த சகோதர சகோதரிகள் நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து ஊக்கமளிப்பவர்களாக இருப்பார்கள். எக்லேசியா என்ற கிரேக்க மொழி வார்த்தையிலிருந்து சபை எனப் பொருள் படும் வார்த்தை ஏற்பட்டது.

1. கொலேசெயர் 1:18

சபை கிறிஸ்துவின் சரிரம்.
சரிரத்திற்கு தலையைப் போல கிறிஸ்து சபைக்குத் தலைவர்.
சபை அவசியமானது. ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு சபையைத் தள்ள முடியாது.

2. 1 கொரிந்தியர் 12:12-26

இரட்சிக்கட்ட நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரிரத்தின் அங்கங்களாவோம்
நாம் ஒரே ஆவியினால் அவரது சரிரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்
சபையின் எல்லா அங்கத்தினர்களும் முக்கியமானவர்கள்
கிறிஸ்துவின் சரிரத்தில் பிரிவினை இருக்கக் கூடாது.

நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் அக்கரை கொண்டவர்களாக இருக்க வேண்டும்

3. 1 தீமோததேயு 3:15

சபையானது தேவனின் முழுக் குடும்பமாகும்.
சபையானது சத்தியத்தின் அடிப்படையில் அமைந்ததாகும்.

4. எபேசியர் 2: 19-22

தேவனுடைய சபை கிறிஸ்துவை மூலைக்கல்லாகக் கொண்டு கட்டப்பட்டுள்ளது.
அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அடித்தளம் ஆவர்
வேதாகமமே சபையின் எல்லா வேதபோதனைகளுக்கும் அடிப்படை

5. எபேசியர் 4: 11-16

தேவனே பல்வேறு ஊழியங்களை நிறைவேற்றும் படி ஊழியக்காரர்களை நியமிக்கிறார்.
தேவன் சபையானது முதிர்ந்து விசுவாசத்தில் ஒருமைப்பட்டிருக்க வேண்டுமென விரும்புகிறார்.
தேவனுடைய சபையில ஒவ்வொரு அங்கமும் அதனதன் வேலையை சரியாகச் செய்தால் சபை வளரும்
சபையைக் கட்டுவதில் தேவன் உங்களை எப்படிப் பயன்படுத்துவார்.

6. எபிரேயர் 13:7

சபை ஏற்படுத்திய தலைவர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

7. எபிரேயர் 312-13

நாம் நமது சகோதர சகோதரிகள் ஆத்மீகமாக இருக்கும் விதமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.
நாம் நாள் தேறும் ஒருவரை ஒருவர் ஊக்கப் படுத்த வேண்டும்.

8. எபிரேயர்: 10: 24-25

நாம் ஒருவரை ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளக எப்படி ஊக்கப்படுத்துவது எனக் கற்றுக் கொள்ள வேண்டும்
நாம் ஒன்றாய் சந்திப்பதற்கு அற்பணித்தவர்களாக இருக்க வேண்டும் (சபைக் கூட்டங்கள்) அப்போஸ்தலர் 2:42
நாம் ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்த வேண்டும்

9. அப்போஸ்தலர் 2 42

ஆதித்திருச்சபையினர் அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கும், அந்நியோனியத்திற்கும், அப்பம்பிட்குதலுக்கும் அற்பணித்தவர்களாக இருந்தனர்

10. கொலோசெயர் 3 12-17

பின்வரும் இந்த குணங்கள் தேவனுடைய சபையில் காணப்பட வேண்டும் : இரக்கம், சாந்தம், மனத் தாழ்மை, மற்றும் பொறுமை
ஒருவரை ஒருவர் தாங்கி எல்லாவித குற்றங்களையும் மன்னிக்கும் தன்மை
நன்றியறிதலோடு ஸ்தேத்திரஞ் செய்தல்
ஒருவருக்கொருவர் கடிந்து கொண்டு புத்தி சொல்லுதல்

11. மத்தேயு 18: 15-17

இயேசு நாம் எப்படி நம் மன பேதங்களை சபைக்குள்ளாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என போதிக்கிறார்

முடிவு: நீங்கள் சபையில் இருப்பதைக் குறித்து தேவனுடைய திட்டம் என்ன என்பதைப் புரிந்து கொண்டீர்களா? இந்த சபையில் அங்கத்தினராக இருப்பதென்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டீர்களா? நீங்கள் அங்கத்தினராக இருந்த எவ்வாறு பொறுப்பாற்ற வேண்டும் புரிந்து கொண்டீர்களா? சபைக் கூட்டங்களுக்கு வருவதன் முக்கியத்துவம் உங்களுக்குப் புரிகிறதா?

# 12.பரிசுத்த ஆவி

உபயோகப் படுத்தப் பட்டுள்ள வசனங்கள்:

1. அப்போஸ்தலர் 2: 36-38
2. யோவான் 16: 7-8
3. எபேசியர் 1:13-14
4. எபேசியர் 3: 16
5. ரோமர் 8: 9, 15-16
6. ரோமர் 8: 26-27
7. 1 கொரிந்தியர் 6: 19-20
8. 2 கொரிந்தியர் 5: 16-18, 22-23

நோக்கம்: வேதாகமம் கற்பவர் மெய்யாகவே பரிசுத்த ஆவியின் வரத்தை ஞானஸ்நானத்தின் போது பெற்றுக் கொள்வாரென புரியவைத்தல். ஞானஸ்நானத்திற்குப் பின் பரிசுத்த ஆவியானவரால் நாம் வழிநடத்தப் படுவோம். அவர் ஞானஸ்நானம் பெற்ற எல்லா கிறிஸ்துவின் சீடர்களிடமும் வல்லமையான கிரியை செய்வார். இந்தப்பாடத்தை சபை பாடத்துடன் சேர்த்தும் போதிக்கலாம். இவ்விரு பாடங்களும் நம் விசுவாசத்தை இறுதிவரை நிலை நிறுத்திக்கொள்ள உதவும்.

1. அப்போஸ்தலர் 2: 36-38

பரிசுத்த ஆவியை நாம் ஞானஸ்நானத்தின் போது பெற்றுக் கொள்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நமக்கு பரிசாகக் கிடைக்கிறார்.

2. யோவான் 16: 7-8

இயேசு நமக்கு ஒரு தேற்றரவாளனை அனுப்ப வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (யோவான் 14:26) (கிரேக்க மொழியில் பாரக்ளேட்டஸ் என்ன சொல் தேற்றரவாளன், உதவுபவர், ஆற்றுகிறவர், வழக்காடுபவர், சார்பாகப் பேசுபவர், ஊக்கப்படுத்துகிறவர் என்ற பொருள்களில் மொழிபெயர்க்கப் படுகிறது.)

பரிசுத்த ஆவியானவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

3. எபேசியர் 1: 13-14

நாம் கிறிஸ்தவராக மாறும் போது பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப் படுகிறோம். பரிசுத்த ஆவியானவர் நமது இரட்சிப்பை உறுதிப் படுத்தும் வைப்புநிதியாக இருக்கிறார்.

4. எபேசியர் 3: 16
நாம் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பலப்படுத்தப் படுகிறோம்.

5. ரோமர் 8: 9, 15-16
பரிசுத்த ஆவியில்லாதவர் கிறிஸ்துக்குச் சொந்தமானவரல்ல. நாம் குமாரர்களுக்கான மகத்துவத்தை ஆவியின் மூலமாகப் பெற்றுக் கொள்கிறோம். ஆவியானவர் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று உறுதியளிக்கிறார்.

6. ரோமர் 8 26-27
ஆவியானவர் நாமக்கு நமது பலவீனத்தில் உதவி செய்கிறார். அவர் நம் பட்சமாகப் பிதாவினிடத்தில் மன்றாடுகிறார்.

7. 1 கொரிந்தியர் 6: 19-20
சரிரமானது பரிசுத்த ஆவியின் ஆலயமாகும். பரிசுத்த ஆவியானவர் உன்னுள்ளே இருப்பார். ஆகவே நாம் நாமது சரிரங்களைக் கொண்டு தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும்.

8. 2 கொரிந்தியர் 3 17-18
ஆவியானவர் நாம் இயேசுவைப் போல மாறும் வரை உதவுகிறார். (வாழ்நாள் முழுதுமான தொடர் மாற்றம்) ஆவியானவர் நம்மில் கிரியை செய்வதனால் நாம் கிறிஸ்துவைப் போல மாற உதவுகிறார். மென்மேலும் அவரது மகிமை நம்மில் விளங்கும்படிச் செய்கிறார்.

9. கலாத்தியர் 5: 16-18, 22-23
நாம் ஆவியின் படி வாழ வேண்டும். நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும். நாம் நமது பாவஇச்சைகளின் படி நடத்தப்படாமல் ஆவியினால் நடத்தப்பட்டால் நாம் ஆவியின் கனிகளான, அன்பு, சமாதானம், சாந்தம், பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், நீடிய பொறுமை மற்றும் இச்சையடக்கம் இவற்றில் வளருவோம். ஆவிக்குள்ளான உங்கள் புதிய வாழ்க்கையில் வளரவேண்டும்.

முடிவு: ஞானஸ்நானத்தின் போது தேவன் நம்மிடம் வைப்புநிதியாய்த் தந்த பரிசுத்த ஆவியானவரையே சார்ந்திருந்து, ஆவியின் கனிகளில் வளர வேண்டும்.

இதர உபயோகமான வசனங்கள்:

மத்தேயு 12: 3 – ஆவிக்கு விரோதமான தேவதூஷனம் மன்னிக்கப் படாத பாவமாகும்.

அப்போஸ்தலர் 1: 8 அப்போஸ்தலர்கள் உலகத்தின் எல்லைவரை சாட்சிகளாகும்படி ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்டனர்.

அப்போஸ்தலர் 5: 3 அனனியா செய்ததைப் போல பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பொய் சொல்ல இயலும்.

1கொரிந்தியர் 12:13 எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளகவே ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்

எபேசியர் 4: 30 பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதீர்கள்

எபேசியர் 5 18 ஆவியினால் நிறைந்திருங்கள்

எபேசியர் 6: 17-18 ஆவியின் பட்டயம் தேவவாக்கியங்கள் ஆகும்

1 தெச 5:19 ஆவியின் அக்கினியை அவித்துப் போடாதிருங்கள்

2 தெச 2: 13 பரிசுத்த ஆவியின் தூய்மைப் படுத்துதலால் உங்களை இரட்சிக்க தேவன் தீர்மானித்திருக்கிறார்.

எபிரேயர் 10: 29 ஆவியை நிந்திக்க முடியும்

2 பேதுரு 20-21 தீர்க்க தரிசனங்கள் ஆவியினால் நிறைவு செய்யப்பட்ட மனிதர்கள் தேவனுடைய வார்ததைகளை பேசுவதால் ஏற்பட்டன.

# 13.மாபெரும் கட்டளை

உபயோகப் படுத்தப்பட்டுள்ள வசனங்கள்:

1. மத்தேயு 5: 14-16
2. லூக்கா 19: 10
3. 1 தீமோத்தேயு 1: 15-16
4. 1 தீமோத்தேயு 2: 3-4
5. 2 பேதுரு 3: 8-9
6. மாற்கு 1: 14-18
7. மத்தேயு 28: 18-20
8. ரோமர் 10: 12-15
9. அப்போஸ்தலர் 8: 4
10. அப்போஸ்தலர் 11: 19-21

நோக்கம்: இயேசுவின் காணாமற் போனவர்களைத் தேடி இரட்சிக்க வேண்டிய பணியின் முக்கியத்துவத்தை அறிவிப்பதே நோக்கம். எல்லாத் தேசங்களுக்கும் சென்று சீடர்களை ஏற்படுத்த ஊக்கப்படுத்தவும் இப்பாடம் பயன்படும்.

1. மத்தேயு 5: 14-16

இயேசு தம் சீடர்கள் உலகத்தின் ஒளியாக இருக்க வேண்டும் என்றார். ஒளியை அணைக்கவோ, மறைக்கவோ கூடாது என்றார். மாறாக எல்லா மனிதருக்கும் முன்பாக ஒளிவீசவேண்டும் என்றார்.

2. லூக்கா 19: 10

இயேசு காணமற் போனவர்களைத் தேடி இரட்சிக்கவே வந்தார். தெலைந்து போன உலகத்தாருக்கு இரட்சிப்பை தருவதே அவர் நோக்கம்

3. 1 தீமோத்தேயு 1: 15-16

பாவிகளை இரட்சிக்க இயேசு வந்தார். தேவன் யாரையும் இரட்சிக்க முடியும் என்பதற்கு நீங்களே உதாரணம்.

4. 1 தீமோத்தேயு 2: 3-4

தேவன் எல்லா மனிதர்களும் சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறார்.

5. 2 பேதுரு 3: 8-9


தேவன் எல்லா மனிதர்களும் மனந்திரும்ப வேண்டுமென விரும்புகிறார். தேவனின் நீடிய பொறுமை எல்லா மனிதர்களும் மனந்திரும்ப வாய்ப்பளிக்கிறது. தேவனின் நீதித் தீர்ப்பு எல்லாரும் மனந்திரும்புவதற்காகவே தாமதப்படுகிறது.

6. மாற்கு 1: 14-18

இயேசுவின் ஊழியத்தின் தொடக்கத்திலிருந்தே மனுஷரைப்பிடிக்க அவர் போதித்தார். இயேசு தமது நோக்கத்தை தமது சீடர்களுக்குக் கொடுத்தார். அவர்களுடைய பதில் உடனடியாகப் பின்பற்றுவதாக இருந்தது.

7. மத்தேயு 28: 18-20

எல்லா தேசங்களிலும் சீடர்களை ஏற்படுத்த வேண்டுமென இயேசு கட்டளையிடுகிறார். எல்லாவற்றையும் கைக்கொள்ளும் படி உபதேசியுங்கள் என்பதன் மூலம் இந்த மாபெரும் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிய கட்டளையிடுகிறார்.



8. ரோமர் 10: 12-15

இயேசுவின் நாமத்தைத் தொழுதுகொள்ளும் எவரும் இரட்சிக்கப்படுவார்கள். ஆனால் நம்பிக்கையில்லாமல் எப்படி ஒருவர் இரட்சிக்கப்பட முடியும்?. கேள்விப்படாமல் ஒருவர் எப்படி நம்புவார்? போதிக்காமல் எப்படி ஒருவர் கேள்விப்படுவார்? போதிக்க அனுப்பப்படாமல் ஒருவர் எப்படி போதிப்பார்?

நீங்கள் போதிக்க அனுப்பப்பட விரும்புகிறீர்களா? தேவனின் நற்செய்தியை எடுத்துச் செல்லும் அழகிய பாதங்கள் உங்களுக்கு இருக்க வேண்டுமென விரும்புகிறீர்களா?

9. அப்போஸ்தலர் 8: 4

துன்பப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் எங்கும் திரிந்து தாமாகவே சுவிஷேசத்தைப் பிரசங்கித்தார்கள். அவர்கள் சபையில் இருந்த சாதாரணக் கிறிஸ்தவர்கள், தலைவர்கள் அல்ல. நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்?

10. அப்போஸ்தலர் 11: 19-21
துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் வெகு தொலைவிலுள்ள நகரங்களுக்குச் சென்று கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பினார்கள். தேவனின் கரம் அவர்களுடன் இருந்தது. அநேகர் நற்செய்தியை நம்பினார்கள்.

நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? மற்றவர்களிடம் இயேசுவைப் போதிக்க நீங்கள் திட்டமிடுங்கள்.

முடிவு: கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் மாபெரும் கட்டளைகள் இதயத்திலே இருக்க வேண்டும். உங்களை எவரோ அழைத்ததைப் போல நீங்களும் மற்றவர்களை அழைக்க வேண்டும். உங்களால் முடிந்தவரை எல்லாருடனும் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நண்பர்கள், உறவினர், சக தொழிலாளர்கள், பள்ளி - கல்லூரித் தோழர்கள், அல்லது வேறெவரையேனும் நீங்கள் அழைக்கலாம்.